பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD

# வலம்புரி

# The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி02 செவ்வாய்க்கிழமை (19.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 243


## அரசின் இடைக்கால சபை வரைபை ஆராய

# புலிகளின் சட்டவல்லுநர் குழு

# நாளை மறுதினம் பாரிஸில் கூடும்!

### சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று கொழும்பு பயணம்

(நமது நிருபர்)



**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான அரசு, விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த வடக்குக் கிழக்கிற்கான இடைக் கால சபைத் திட்டவரைபை ஆராய்வதற்கும், திருத்தப்பட்ட திட்ட வரைபை அரசுக்கு அனுப்பி வைப்பதற்குமான ஆலோசனை களை மேற்கொள்வதற்காக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் கேணல் கருணா அம்மான் உட்பட 10 பேர் அடங்கிய குழுவினர் இன்று பாரிஸ்'க்கு பயணமாகின்றனர்.**

அரசினால் சமர்ப்பிக்கபட்ட வடக்குக்கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபை வரைபை விடு தலைப் புலிகளின் சர்வதேச சட்ட நிபுணர் குழுவுடன் இணைந்து பரி சீலிப்பதற்காகவே இவர்கள் பாரி ஸிற்கு பயணமாகின்றார்கள்.இக் குழுவினர் நாளை மறுதினம் பாரி ஸில் கூடி திட்ட வரைபை ஆராய் வர்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை யில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், சமாதான செயலணி பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் அடங்கிய குழு இன்று விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் கொழும்புக்கு புறப்பட்டுச் செல்ல வுள்ளது.

விடுதலைப் புலிகளின் பொரு ளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ் வரன், சிரான் பணிப்பாளர் இரேனி யஸ் செல்வின் ஆகியோர் பாரிஸ் செல்வதற்காக ஏற்கனவே கொழும்பு சென்றுள்ளனர்.

(10ம்பக்கம் பார்க்க)



மூதூரில் இரண்டு முஸ்லிம்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அங்கு விஜயம் செய்த அமைச்சர் ஹக்கீம் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

## பாலத்தினுள் வீழ்ந்த காவலாளி பரிதாப மரணம்

(ஈச்சமோட்டை)

யாழ்.பிரதான நீர்த்தாங்கி அருகே உள்ள பாலத்தினுள் வீழ்ந்த ஒரு வர் பரிதாபகரமாக உயிரிழந்துள் ளார்.

மவுண்கார்மேல் வீதியும் பிரதான வீதியும் சந்திக்கும் பகுதியில் நீர்த் தாங்கிக்கு அண்மையில் அமைந் துள்ள இப் பாலத்தின் பாதுகாப்புச் சுவர் இடிந்த நிலையிலேயே நீண்ட நாட்களாகத் திருத்தப்படாமல் காணப்படுகின்றது.

இச் சேதமடைந்த பாலத்தினூடு சைக்கிளில் சென்ற குருநகரைச் சேர்ந்த எஸ்.அருமை(வயது60) என்ற திருமறைக்கலாமன்றக் காவலாளியே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு தவறிவிழுந்து மரணமானவர் ஆவார்.

இரவு பெய்த மழையினால் இவரது உடல் விறைத்த நிலையில் பாலத்தினுள் காணப்பட்டது.நேற்றுக்

(10ம்பக்கம் பார்க்க)

## அடுத்த மாதம் 15ந் திகதி வவுனியாவில் பொங்கு தமிழ்

(வவுனியா)

அடுத்த மாதம் 15ந் திகதி வவு னியாவில் மாபெரும் பொங்கு தமிழ் எழுச்சி நடைபெறவுள்ளது.

பொங்குதமிழ் நிகழ்வை முன் னிட்டு நேற்றைய் தினம் வவுனியா பாக்வீதியில் பொங்குதமிழ் காரியா லயம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதேவேளை பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சகல வெளிநாட்டுத் தூதரகங்கள் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் அரச பிரதிநிதிகள் ஆகி யோருக்கு அழைப்புக்கள் விடுப்ப தற்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. (த-13)

## நோர்வே பேராசிரியர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

நோர்வேயைச் சேர்ந்த பேராசி ரியர்கள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தது.

நோர்வே விவசாயப் பல்கலைக் கழகப் பணிப்பாளர் பேராசிரியர் ருத், ஒஸ்லோ பல்கலைக் கழக சமூக விஞ்ஞானப் பேராசிரியர் கிறிஸ்ரி றொக்கோ உட்பட ஆறு பேர் அடங்கிய குழுவினரே யாழ்.வந்த வர்கள் ஆவர்.

இவர்கள் யாழ்.செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினிஅம்மா திலகநாயகம் போல், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து யாழ்.குடா நாட்டின் தற்போதைய நிலைவரம்

(10ம்பக்கம் பார்க்க)

## புலிகள் விடுக்கும் அச்சுறுத்தலுக்கு பிரதமர் எடுத்த நடவடிக்கை என்ன?

### எதுவும் தெரியாது என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம் அமைத்து வரும் விடுதலைப்புலிகள் படை வீரர்களையும், மாற்று அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களையும் அச்சுறுத்தி வருவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுத்த நடவடிக்கைகள் குறித்து இதுவரை நாட்டு மக்களுக்கு எதுவும் அறிவிக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு மேற்கொண்டு வரும் சமாதான நடவடிக்கைகள் குறித்து தொழில்சார் நிபுணர் சங்கத் தலைவ ருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு ஜனா திபதி தெரிவித்துள்ளார்.அக் கடித த்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப் பதாவது;

அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தை களில் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒரு வரைச் சேர்த்துக் கொள்ளுமாறு ஆரம்ப நாள் முதல் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதும் அதற்கு இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் அவர் எடுக்க வில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோகப்பற்றற்ற முறையில் தமது நிர்வாகத்தை விரிவுபடுத்தி வருகின்றார்கள் இத்தகைய சம் பவங்கள் தொடர்பாக தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாட்டு மக் களுக்கோ அல்லது பாராளுமன் றத்திற்கோ இதுவரை அறிவிக்க வில்லை.இது அரசின் பலவீனத்தைக் காட்டுவதோடு எதிர் காலத்தில் நாட்டின் இறைமைக்கும்அச்சுறுத் தலாக இருக்கும் என்றும் குறிப்பிட் டுள்ளார். (ம)

### காணி அமைச்சருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

காணி அமைச்சர் ராஜித சேனா ரத்தினாவின் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச் சர் ஜோன் அமரதுங்கா தெரிவித் துள்ளார்.

அமைச்சர் ராஜிதசேனாரத்னாவை கொலை செய்வதற்கான சதித் திட்ட

(10ம்பக்கம் பார்க்க)

### கொழும்பில் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இராணு வத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் சுற்றிவளைப்பின் போது 65 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழுமபுப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதிலிய னகே தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பொலி ஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைத்துத் தேடு தல் நடத்தி' வருவது குறிப்பிடத்த க்கது. (வ)

## தமிழீழ காவல் துறையினரால்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.யை தாக்க முற்பட்ட இளைஞன் கைது!

(வவுனியா)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மீது சேமமடுவில்வைத்து தாக்கு தல் நடத்த முற்பட்ட இளைஞனை தமிழீழ காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

பழிவாங்கும் நோக்குடனேயே இரும்புக் கதிரையால் சிவசக்தி ஆனந்தனை தான் தாக்க முற்பட் டதாக அவ் இளைஞன் காவல் துறையினருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவம் இலங்கை யில் நிலை கொண்டிருந்த காலத் தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத் தைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தன் தனது குடும்பத்தை துன்புறுத்தினார் எனறும் அவ் ஆத்திரதாலேயே தான

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலை மாணவர்கள் புரிந்துணர்வுடன் நடக்கத் தவறினால் சமாதானம் குழம்பிவிடும்

## அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பார்க்கின்ற போது புனரமைப்பு நடவடிக்கைகளை எந்த இடத்தில் ஆரம்பித்து எந்த இடத்தில் முடிப்பது என்று கூற முடியாமல் இருக்கிறது.

அந்த அளவிற்கு யுத்தத்தின் கொடூரப் பிடிக்குள் அகப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார்.

கடந்த மாதம் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற சமயம் தன்னைப் பல்கலைக்கழகத்திற்குள்ளே நுழைய விடாது மாணவர்கள் தடுத்தமை பற்றியும் அதற்கான பின்னணி பற்றியும் கருத்துக் கூறுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

சர்வதேச நாடுகள் பல வடக்கு-கிழக்கு மாகாணப் புனரமைப்புக்குத் தேவையான நிதியை ஒதுக்கியுள்ளபோதும் அவை உரியவாறு பயன்படுத்தப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தவில்லை. படையினர்- குடியிருப்புக்கள், பாடசாலைகள், ஆலயங்களிலிருந்து முழுமையாக வெளியேறவில்லை. ஒழுங்கான முறையில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறியே என்னை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை.

பல்கலைக்கழக மாணவர்களின் மேற்படி கோரிக்கைகள் நியாயமானதுதான் ஆனால் அவர்கள் சில விடயங்களை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

20 வருட கால போரினால் பெரும் அழிவுகளுக்குள்ளாகி இருக்கும் யாழ். மாவட்டத்தை ஒன்றரை வருட காலத்திற்குள் புத்துயிர் அளித்து அபிவிருத்தி செய்வது எவ்வாறு முடியும்? அத்துடன் வடக்கு மாகாணத்தை புனரமைப்பதற்கு தெற்கிலுள்ள நிலைமை வடக்கில் இல்லை. வடக்கில் அரச இயந்திரம் ஒழுங்கான முறையில் இல்லை. உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

மேலும் கண்ணிவெடி அகற்றும் பணி மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றது. முழுமையாக வடக்கில் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை. அத்துடன் நாளாந்தம் கண்ணிவெடிகளுக்குள் சிக்குண்டு உயிரிழந்தவர்களினதும், காயமடைந்தவர்களினதும் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது.

இவற்றையெல்லாம் இளம் சமுதாயத்தினரான பல்கலை மாணவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை, பல்கலை மாணவர்களின் மேற்படி செயலிற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பின்னணியாக இருப்பதாக சிலர் என்னிடம் கேட்டார்கள்.

ஆனால் நான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அரசியல் இலாபம் தேடுவதற்காக யாழ். மாவட்டத்திற்கு செல்லவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம் அந்த அரசு பொருளாதாரத் தடையினாலும் போரினாலும் வன்னி மக்களை வதைத்தது. இந்நிலையில் அவர்களுக்கு மருத்துவ சேவையாற்றி அப்போதைய அரசினால் பல தடவை அச்சுறுத்தப்பட்டு புலி முத்திரை குத்தப்பட்டவன் நான்.

அத்துடன் அண்மையில் கூட கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விளையாட்டு மைதானத்தை தேசிய கிரிக்கெட் மைதானம் ஆக்குவது பற்றி ஆராய்ந்ததுடன் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினேன்.

எனவே என்னை வடக்கிற்கு செல்ல புலிகள் தடை விதிக்க மாட்டார்கள். அத்துடன் நான் வடக்கிற்குச் செல்வதை எவரும் தடுக்கவும் முடியாது. எனது அமைச்சின் ஊடாக மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை நான் தொடர்ந்தும் ஆற்றுவேன்.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும வரை நான் எனது பணியை முன்பை விட நன்றாக முன்னெடுப்பேன்.

எனது அமைச்சின் மூலம் நடைபெறுகின்ற ஒவ்வொரு பணியையும் விடுதலைப்புலிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

அத்துடன், அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் தொடர்ந்தும் ஆர்வமாகவும் இருந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இதேசமயம் இன்னொரு முக்கியமான விடயம் ஒன்றையும் கூற விரும்புகின்றேன்.

நிரந்தர சமாதானம் ஒன்று எமது நாட்டில் ஏற்படவேண்டுமானால் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். புரிந்துணர்வு எல்லோரிடமும் ஏற்பட வேண்டும். புரிந்துணர்வின்மையுடன் நடந்துகொள்ள முற்பட்டால் அதன் விளைவுகள் சமாதானத்தையே குழப்பிவிடும். மீண்டும் போரை உருவாக்கிவிடும் என்றார்.

(உ-10)

## ஸ்ரீலங்கன் எயார் லைன் இரு விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன் விமான நிறுவனம் மேலும் இரு விமானங்களை கொள்வனவு செய்ய விருப்பதாக நிறுவன முகாமையாளர் சந்தன டி.சில்வா தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து,இலங்கைக்கு அதிகமான உல்லாசப் பயணிகள் வருகைதருகின்றமையினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட சந்தன டி சில்வா,

இவ்வாறு மேலதிகமாக விமானங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் உல்லாசப் பயணிகளின் தொகையை மேலும் அதிகரிக்க முடியும் என்றார். (தி-10)

## பிரதமரின் இந்திய விஜயத்தின்போது

## பாக்கு நீரிணை ஊடாகப் பாலம் அமைப்பது பற்றி ஜெயாவுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்திய விஜயத்தின்போது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாக்கு நீரிணை ஊடாக பாலம்





ஒன்றை அமைப்பது தொடர்பாக தமிழக முதலவர் ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவின் தமிழ் நாட்டிற்கும் இடையில் பாதிப்பினை ஏற்படுத்தும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் ரணில் எதிர்வரும் 23ஆம் திகதி ஜெயலலிதாவுடன் விரிவாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பாலம் அமைப்பது தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசிற்கு தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் இப்பாலத்தை அமைப்பதால் உண்டாகக்கூடிய நன்மையான விளைவுகள் பற்றி ஜெயலலிதாவிற்கு விளக்கமளிக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிற்கு விஜயம் செய்யும் பிரதமர் அங்கு கேரள மாநிலத்திற்கும் விஜயம் செய்யவுள்ளதுடன் பல பிரமுகர்களையும் சந்திப்பார் எனத் தெரிய வருகின்றது.

(உ-18)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

* புலிகளின் யோசனைகளை அரசு ஏற்குமா?
* ஈழக்கடலில் தமிழக மீனவர்களின் ஊடுருவல்.
* அமைச்சர்களுக்குள் குத்துவெட்டு- அரசு ஆட்டம் காணுமா?
* ஆலடி மாநாடு.
* வியாசரின் பதில்கள்.
* செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா14

சங்குநாதம்


# நுரையீரல் பாதிப்பில் இருந்து விடுபட உங்கள் துக்கங்களை விடுவியுங்கள்

துக்கம் தொண்டையை அடைக்கிறது என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது நம் வாழ்க்கையில் ஏதாவது தீய செயல்கள் நடந்து விட்டால் நம்மால் துக்கம் தாள முடியாது. இவ்வாறு அதிக துக்கம் ஏற்பட்டால் நமக்குத் தொண்டையை அடைப்பது போலவும், இறுக்குவது போலவும் உணர்ச்சிகள் தோன்றுவதை நாம் உணர்கிறோம். இந்த உணர்ச்சிகளுக்கு மிக முக்கிய காரணம் தொண்டையுடன் சம்பந்தப்பட்ட 'நுரையீரல்', துக்கத்தினால் பாதிப்படையும் போது அத்துடன் தொடர்புடைய தொண்டையில் இறுக்கும் உணர்ச்சி நமக்குத் தோன்றுகிறது.

நுரையீரலை இந்தத் துக்கம் தாக்கும் பொழுது சுவாசம் சீராக இராது. அடுத்து நுரையீரலின் ஜோடி உறுப்பான பெருங்குடல் பாதிப்படையும். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு உறுப்பாக பாதிப்படையும். அடுத்து இதயம், சிறுகுடல் பாதிப்படையும். இதனால் தான் துக்கச்செய்தி கேட்டவுடன் இதயத்துடிப்பு அதிகமாகிறது. துக்கச் செய்தி இதயத்தையும் பாதிக்கும்.

துக்கத்தை மறக்க இதைச் செய்கிறோம் என்பதெல்லாம் ஒரு மன சாந்தியே தவிர உண்மையல்ல. ஏற்கனவே துக்கத்தால் இவர்களின் நுரையீரல் மற்றும் பெருங்குடல் பாதித்திருக்கும். மேலும் இந்தக் குடிப் பழக்கத்தால் கல்லீரலும் பாதிக்கும். ஏற்கனவே துக்கத்தால் நுரையீரல் பலவீனமடைந்த நிலையில் புகைப்பிடிப்பதால் நுரையீரல் மென்மேலும் பாதிப்பிற்கு உள்ளாகிறது.

சிலர் அதுவும் குறிப்பாக வயதானவர்கள், என் கவலையை யாரும் பொருட்படுத்துவதே இல்லை, என் கவலை பற்றி யாருக்கும் அக்கறை இல்லை, என் கவலையை யாரும் கேட்பதில்லை என்பது போல புலம்பலை பலரிடமும் பார்க்கிறோம். இவ்வாறு அல்லாமல் வீட்டில் இருப்போர்கள் அவர்களிடம் பேசி அவர்களை மதித்து அவர்களின் கவலையை மறக்க அல்லது கவலையின் அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து அதிலிருந்து அவர்களை விடுபடச் செய்ய வேண்டும். இல்லையெனில் அவர்களின் துக்கத்தைப் போட்டு குழப்பிக்கொண்டே இருப்பதனால் இது இறுதியில் மன அழுத்தம்டும். ஏனெனில் கவலை நுரையீரல் மற்றும் பெருங்குடல் ஆகிய உறுப்புக்களைப் பாதித்து, இந்தப் பாதிப்பின் தாக்கம் தொடர்ந்து பல உறுப்புக்களையும் தொடரும் சூழ்நிலை ஏற்படும். பின் மன அழுத்தம் அதிகரிக்கும்.



சில மன நோயாளிகளை கவனித்துப் பார்த்தால் எப்பொழுதும் அழுதுகொண்டே இருப்பர். அவர்கள் எப்பொழுதும் துக்கத்துடனேயே இருப்பர். ஆகவே இந்தத் துக்கமும் ஒருவரை வெகு விரைவில் மன நோயாளியாக மாற்ற வாய்ப்புண்டு.

உதாரணமாக ஒருவருக்கு ஏதோ ஒரு விதத்தில் கவலை அவர் மனதில் குடிகொண்டு விட்டது என்றால் உடன் அவர் அக்கவலையை மறக்க முயற்சிக்க வேண்டும். அல்லது அந்தக் கவலையைத் தீர்க்க என்ன சரியான வழியோ அதை முயற்சித்து அந்தக் கவலையில் இருந்து முற்றிலுமாகத் தான் விடுபடவேண்டும்.

அதை விடுத்து அக்கவலையில் இருந்து விடுபட முயற்சிக்காமல் தனக்குள்ளேயே அதைப்பற்றி எண்ணிக் குழப்பிக்கொண்டே இருந்தால் உடன் அந்தத் துக்கம் நுரையீரலையும், பெருங்குடலையும் முழு வேகத்துடன் பாதிக்கும். அடுத்து அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் ஒரு டென்ஷனுடன் காணப்படுவர். இவ்விரு உறுப்புக்கள் பாதித்தவுடன் அடுத்து வயிறு மற்றும் மண்ணீரலையும் மேலும் சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பையையும் பாதிக்கும் முயற்சி முழு வேகத்துடன் நடைபெறும். இதனால் மனதில் துக்கத்தால் ஒருவகையான டென்ஷன் மற்றும் மனப்பயமும் படிப்படியாக அதிகரிக்கும்.

இவை எல்லாவற்றுக்கும் ஆரம்ப காரணம் கவலை. இந்தக் கவலையினால் உடல் அளவிலும், மனத்தளவிலும் பாதித்தவரை பார்த்தீர்களானால் ஆரம்பக் கட்டத்தில் அவர்களுக்கு அடிக்கடி சளி பிடிக்கும். மாத்திரை, மருந்து சாப்பிட்டால் உடல் குணமாகும். பின் சில நாட்களில் மீண்டும் சளித்தொந்தரவு தொடரும். அடுத்ததாக மலச்சிக்கல் ஏற்படும். இதனால் தலைவலியும் ஏற்படும். இப்பொழுது சளி, மலச்சிக்கல், தலைவலி என எல்லாவற்றிற்கும் தனித்தனியாக மாத்திரை, மருந்துகள் தொடரும். இதன் அடுத்த கட்டமாக சிறிது நாட்களில் உடல் எங்கும் தோல் முழுவதும் வறண்டு காணப்படும். இதன் தொடர்ச்சியாக சில நாட்களில் அவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் தோல் நோய் வெளித்தோன்ற ஆரம்பிக்கும். மேற்கண்ட பிரச்சினைகளான சளி, மலச்சிக்கல், தலைவலி, தோல் வியாதி இவை அனைத்திற்கும் மூல காரணம் கவலை எனும் உணர்வு நம் உடல் உறுப்புகளை பாதித்ததால் ஏற்பட்டவையே.

இந்த மேற்கண்ட அனைத்துப் பிரச்சினைக்கும் தனித்தனியாக மாத்திரை, மருந்துகள் எடுத்துக்கொண்டு இந்த உறுப்புக்களின் சக்திக் குறைபாட்டை நமக்கு வெளிக்காட்டும் அறிகுறிகளை நாமே நோயாக வளர்த்து உருவாக்கி விடுகிறோம் என்பதே உண்மை. இவ்வாறு நாமாக எடுத்துக்கொண்ட இந்த மாத்திரை, மருந்துகள் நோயாக மாறி இதன் பக்க விளைவுகளாக வேறு சில உடன்பிறப்பு நோய்களையும் உருவாக்கி விடுகிறோம். இவ்வாறு அடுத்தடுத்து உறுப்புகளையும் பாதிக்கும் பொழுது பின் அவற்றிலிருந்து நோய்கள் உருவெடுக்க ஆரம்பிக்கும்.

இவற்றிற்கெல்லாம் மூல காரணமான கவலையை அவர் மனதில் இருந்து அகற்றிட வழி தேடிக் கொடுத்து மேலும் அவருக்குத் தேவையான மலர் மருந்துகளை தேர்வு செய்து அகுபங்சரின்படி அவருடைய நுரையீரலுக்கும், பெருங்குடலுக்கும் சீராக இயங்க சக்தியைத் தூண்டும் புள்ளிகளை தூண்ட இவருடைய அனைத்து வியாதிக்கும், பிரச்சினைக்கும் அன்றைய பொழுதே முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். மலர் மருந்துகளை ஏன் தேர்வு செய்ய வேண்டுமென்றால் அவருடைய மனப் பிரச்சினைகளைக் களையக்கூடிய அதி வல்லமை இந்த மலர் மருந்திற்கு உண்டு. இதுபோன்ற பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே களைந்து விட்டோமானால் கண்டிப்பாக இது பின்னாளில் மன நோயாக மாற வாய்ப்பு இல்லை. இதை விடுத்து அலட்சியமாக இருப்பின் இந்தக் கவலை உடல் உறுப்புக்களை பாதித்து நோய்களை உருவாக்கி இறுதியில் மனம் முழு அளவில் பாதித்து இதனால் மூளை பாதித்து கண்டிப்பாக மனநோயாளியாக மாற வாய்ப்பு உண்டு. □

## மருத்துவ விளக்கம்

சிலர் தன் வாழ்க்கையில் நடந்த துக்கச் சம்பவங்களை எண்ணிக் கொண்டே இருப்பர். இந்த துக்கச் சம்பவத்தை எண்ணிக் குழப்பிக் கொண்டே இருப்பதால் மனம் பாதிப்படையும். இந்தத் துக்கத்தை வெளிக்காட்டிவிடவேண்டும். இதை எண்ணிக்கொண்டே இருத்தல் கூடாது. இதை அழுகையாகவோ அல்லது அடுத்தவர்களிடமோ தன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மனம் விட்டு சப்தம் போட்டு அழுதாலே நம்முடைய பாதித்துக்கம் குறைந்துவிடும். இந்தத் துக்கத்தை மனதிலேயே போட்டுக் குழப்புதல் கூடாது. அழுகையாகவோ அல்லது வேறு முறையிலோ துக்கத்தை வெளிப்படுத்திவிடவேண்டும்.

சிலர் புகைப்பிடிப்பர் அல்லது மது அருந்துவர். அவர்களிடம் விசாரித்தால் துக்கத்தை மறக்க குடிக்கிறேன் என்று சொல்வர். இது ஒரு தவறான செயல். மேலும் அதிகமாகி மனநோயில் சென்று முடியும்.

குறிப்பாக குழந்தைகளின் கவலைகளை உடனே தீர்த்து வைக்க வேண்டும். குழந்தை தானே என்று இருத்தல்கூடாது. இது கண்டிப்பாக குழந்தையின் மனத்தைப் பாதிக்கும். அப்பா, அம்மா நாம் எது சொன்னாலும் கேட்பதில்லை, நம்மேல் அவர்களுக்குப் பாசமில்லை என மனதில் தோன்றிவிட்டால் அந்த எண்ணத்தை அவர்கள் மனதில் இருந்து அகற்றுவது பெரிய காரியமாக ஆகிவிடும். ஆகவே குழந்தைகளையும் மதித்து அவர்களின் குறைகளையும் போக்குவது பெற்றோர்களான நமது கடமையாகும்.

சிலர் காரணத்துடன் கவலையுடன் இருப்பர், சிலர் காரணமே இல்லாமல் கவலையுடன் இருப்பர். இவ்வாறு எப்படிப்பட்ட கவலையாயினும் இவர்கள் உடனே தன்னைத் திருத்திக் கொள்ள வேண்

### டாக்டர்
### எஸ்.ஆர்.சங்கர்குமார்

---

# ரயில்வே ஊழியர்கள் எதிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தினை அதிகாரசபையாக மாற்றியமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையொன்று எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

மருதானை ரயில்வே நிலையத்திலிருந்து ஊர்வலமாக தொழிலாளர்கள் புறப்பட்டு போக்குவரத்து அமைச்சரிடம் 15ஆயிரம் ரயில்வே தொழிலாளர்கள் ஒப்பமிட்ட மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

அதேதினம் மேற்படி மகஜரின் பிரதியொன்று ஜனாதிபதியிடமும் கையளிக்கப்படவுள்ளது. இதற்கு அரச சேவையிலுள்ள தொழிற் சங்கங்கள் அனைத்தினதும் ஆதரவு கிடைக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ)

---

பு,நகரியில்

# கல், மண் அகழ்வோர் மீது பிரதேச சபை கட்டுப்பாடு

(மருதங்கேணி)

பூநகரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சில இடங்களில் கல், மண் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரியவந்துள்ளது.

இதனைத் தடுத்து நிறுத்திப் பேரழிவிலிருந்து சூழலைக் காப்பாற்றும் முகமாக குடமுருட்டி, கௌதாரிமுனைப் பகுதிகளில் மண்ணும் முழங்காவில் பகுதியில் கல்லும் அகழ்ந்தெடுக்கலாம் எனவும் இதனை மீறி வேறு இடங்களில் கல், மண் அகழ்வோர் மீது மாவட்ட சூழல் அபிவிருத்தி சட்டத் தீர்மானத்திற்கு அமைவாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பூநகரி பிரதேச சபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(பி-35)

---

**தேர்தல் அறிவிப்பை விரைந்து வெளியிடுக!**

## ஜே.வி.பி., சிஹல உறுமயக் கட்சிகள்

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்குவாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்த விரைவில் உத்தரவிடவேண்டுமென ஜே.வி.பி. யினரும், சிஹல உறுமயக் கட்சியினரும் வற்புறுத்திவருவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனால், ஜனாதிபதி இவ்வருட இறுதிக்குள் தேர்தலொன்றை நடத்துவார் என எதிர்பார்ப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை டிசம்பர் மாதம் நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்றும்,

இதுபற்றி பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சித் தலைவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அறிவித்திருப்பதாக்வும் இதனையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாகி வருகின்றதாகவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மேலும் இத்தகையதொரு தேர்தலை நடத்தி ஆட்சியினைக் கைப்பற்றுவதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வி.பி.யினருடன் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு மீண்டும் தீவிரம் காட்டி வருகின்றதாகவும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசினால் எவருக்கும் எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லையென்றும் அவர்கள் சுக போக அரசியலையே நடத்தி வருகின்றதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டி [illegible] தும் குறிப்பிடத்தக்கது.

பதவிக்காலம் முடிவடையவுள்ள மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு அவற்றுக்கான தேர்தல்களை நடத்தி ஒத்திகை பார்த்தபின்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி இரகசியமான முறையில் நடவடிக்கை எடுத்து வருகின்றதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தேர்தல் எப்போது நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டுமென ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியின் அமைப்பாளர்களையும், தலைவர்களையும், எம்.பிக்களையும் பிரதமர் ரணில் கேட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## பெண்கள் சிகிச்சை விடுதி

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெண்கள் சிகிச்சை விடுதி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனம் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.(உ-35)

# ஜெயா அரசுக்கு எதிராக 22ஆம் திகதி தமிழ்நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டம்

## எதிர்க்கட்சிகள் நடத்தத்தீர்மானம்

(புதுடில்லி)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் விடயத்தில் ஜெயலலிதா அரசின் நடவடிக்கை ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று கூறி தமிழ்நாடு முழுவதிலும் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்த அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு இணங்க இம் மாதம் 22ஆம் திகதி தமிழ்நாடு சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது தமிழ்நாடு அரசின் எஸ்மா எனப்படும் அவசர பணிகள் சட்டத்தின் கீழ் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவிக்கவிருப்பதாக மார்க்ஸிஸ்ற் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தி.மு.க பொதுச் செயலர் க.அன்பழகன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஆர்.நல்லக்கண்ணு மற்றும் பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (பி-2)

## நைஜீரியாவில் இனமோதல் தொடர்கிறது

(அபுஜா)

நைஜீரியாவில் இடம்பெற்று வரும் இனமோதல்கள் காரணமாக இதுவரை 4பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

நைஜீரியாவின் தென்பகுதியிலுள்ள புாரி நகரில் கடந்த 3 தினங்களாக இன மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும், இந்த மோதல்கள் காரணமாக 55 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் நைஜீரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இம்மோதல்கள் மேலும் ஏற்படாத வண்ணம் தடுப்பதற்காக கலவரம் இடம்பெறும் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருப்பதாக நைஜீரிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (பி-2)

# வாஜ்பாய் அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இன்று சபையில் வாக்கெடுப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் வாஜ்பாய் அரசின் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவிருக்கின்றது.

இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக திராவிட முன்னேற்றக்கழகம் முடிவெடுத்துள்ளது.

அதேசமயம் செல்வி ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.கழகமும் வாஜ்பாய் அரசிற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு மத்திய அரசிற்கு போதியளவு ஆதரவு இருப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இன்று நடைபெறவுள்ள வாக்களிப்பின்போது அரசிற்கு ஆதரவாக வாக்களிப்பதென தி.மு.க தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த அவர் பசுவதை தடுப்புச் சட்டம் குறித்தும், இராமர் கோயிலை வைத்தும் தற்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்றும் அதற்காக சட்டம் கொண்டுவரப்பட்டால் அதனை எதிர்ப்போம் என்றும் கூறினார்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களிடமும் கலந்து பேசிய பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின்போது அரசை ஆதரித்து வாக்களிப்பது என்றும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் அரச தரப்பில் இருந்து அ.இ.அ.தி.மு.க.வின் ஆதரவு கோரப்பட்டால் உங்கள் நிலைப்பாடு என்னவென்று செய்தியாளர்களால் கேட்கப்பட்டதற்கு, அ.இ.அ.தி.மு.க.வினர் ஓடிவந்து ஆதரவு தர தயாரென்ற நிலை இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று பதிலளித்தார்.

அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள வாஜ்பாய் அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிச்சயமாகத் தோற்கடிக்கப்படும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் எஸ்.இராமதாஸ் தனது அறிக்கையொன்றில் கூறியுள்ளார். (பி-2)

# உழல்களை எடுத்துக்காட்டவே நம்பிக்கையில்லா பிரேரணை

## காங்கிரஸ்கட்சி கூறுகிறது

(புதுடில்லி)

இந்திய ஆளும்அரசுக்கு எதிராக தற்போது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை,1999ஆம் ஆண்டு இடம்பெற்ற கார்கில் போருக்கான ஆயுதக்கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகளை எடுத்துக் காட்டவே கொண்டுவரப்பட்டதாக எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளன.

கார்கில்போரின் போது இடம்பெற்ற ஆயுதக்கொள்வனவுகளில் அதிகஊழல்கள் இடம் பெற்றிருப்பதாக இந்தியப் படைத்துறை அமைச்சர் ஜோர்ச்பெர்னாண்டஸ் மீது குற்றஞ்சாட்டியுள்ள காங்கிரஸ்கட்சி தற்போது ஆளும் கட்சிக்குஎதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அனைத்துக்கட்சிகளுக்கும் கோரிக்கைவிடுத்துள்ளது. (பி-2)

# 'ரொய்ட்டர்' புகைப்படப்பிடிப்பாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை

## அமெரிக்கப் படைவீரர் மீது குற்றச்சாட்டு

(பக்தாத்)

ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த புகைப்படப் பிடிப்பாளரான மார்ஷான்டானா நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் பக்தாத்திலுள்ள அமெரிக்கச் சிறைச்சாலைக்கு அருகில் படம்பிடித்துக்கொண்டிருந்த போது படைவீரர் ஒருவானால் சுட்டுக் கொல்லப்பட்டதாக ரொய்ட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

அமெரிக்கப் படைவீரரொருவரே இவரைச் சுட்டுக்கொன்றார் என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனினும் இது குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக அமெரிக்க இராணுவம் கூறுகின்றது.

43 வயதான டானா சிறந்த புகைப்படப் பிடிப்பாளர் என்றும் அவர் பல்வேறு விருதுகளைப் பெற்றவர் என்றும் ரொய்ட்டர் மேலும் கூறுகின்றது.

இதுவரை இவருடன் ஈராக்கில் 17 பல்வேறு ஊடகவியலாளர்கள உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (பி-9)

# எல்லைக்கோட்டுப் பகுதியில் இந்தியா படைகளை குவிக்கிறது

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்தியா தனது படைகளைக் குவித்துவருவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.


இரகசியப் புலனாய்வுத்துறையினர் மூலம் கிடைத்த தகவலை மேற்கோள்காட்டி இக்குற்றச் சாட்டை முன்வைத்துள்ள பாகிஸ்தான்,

இந்தியாவின் படைக்குவிப்பு நடவடிக்கை இரு நாடுகளுக்குமிடையில் தற்போது நிலவிவரும் சுமூகமான உறவை மிக மோசமாகப் பாதித்துவிடும் என்று எச்சரித்துள்ளது.

திராஸ்-கார்கில் பகுதிகளில் படையினர் அதிகமாக குவிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் திராஸ் பகுதி மக்கள் நடமாடுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும்,

இது மிகப் பெரிய இராணுவ நடவடிக்கைக்கான ஆயத்தவேலை என்றும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

மேலும் அவ்வாறு இராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டால் பதிலுக்கு பாகிஸ்தானும் செயற்பட நேரும் என்று பாகிஸ்தான் எச்சரிக்கையாகக் கூறியுள்ளது. (பி-2)



# இந்தியாவுக்கு ஏவுகணைத் தொழில்நுட்பம் விற்பனை செய்து பிடிபட்டிருந்த யு.எஸ். அதிகாரிகள் விடுதலை

(வாஷிங்டன்)

இந்தியாவுக்கு ஏவுகணைத் தொழில்நுட்பத்தை விற்பனை செய்த குற்றத்திற்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரை அமெரிக்க சமஸ்ரி நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் கண்டிக்கப்படவேண்டிய போதிலும் குற்றவாளிகள் அல்லவென நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஏவுகணைகளைத் தயாரிப்பதற்கு தொழில்நுட்பங்களை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சிறப்பு அனுமதி பெறாமல் வர்த்தக ஏற்றுமதி விதிமுறைகளை மீறி தொழில்நுட்பக் கருவிகளை இவர்கள் இந்தியாவுக்கு கப்பல் மூலம் அனுப்பி வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவர்கள் மீதான வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனையும், 50 லட்சம் டொலர் அபராதமும் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

# மாவோ தீவிரவாதிகளுடன் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

(காத்மண்டு)

நேபாள அரசாங்கத்துடன் மாவோ தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 7வருடங்களாக இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலே இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேபாள் குஞ் பகுதியில் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இந்த இடத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரிமாதம் அறிவிக்கப்பட்ட போர்நிறுத்தத்தையடுத்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது மே மாதம் இடைநின்று போனமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

## யு.எஸ்.நிலைப்பாடு மாறவேண்டும்

# அணு ஆயுத உற்பத்தியை நிறுத்த வட கொரியா நிபந்தனை

(பியோங்யாங்)

வடகொரியா மீதான ஒரு தலைப்பட்சமான நிலைப்பாட்டினை அமெரிக்கா மாற்றாவிடின் அணுவாயுத உற்பத்தி நடவடிக்கைகளை நிறுத்தப்போவதில்லையென வட கொரியா அறிவித்துள்ளது.

நேற்றய தினம் இந்த அறிவிப்பினை விடுத்த வடகொரியா, இம்மாதம் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள 6 தரப்பு பேச்சுவார்த்தையின்போது இந்த அறிவிப்பினை வலியுறுத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வர்த்தகத்தை தடை செய்யக்கூடாது. அத்துடன் இராஜதந்திர உறவுகளை சீர்குலைக்கக் கூடாது என்ற முக்கிய கோரிக்கைகளுக்கு அமெரிக்கா சம்மதிக்க வேண்டுமெனவும் வட கொரியா கூறியுள்ளது.

எனினும் அமெரிக்கா அதற்கு இதுவரை எந்தவொரு பதிலையும் தெரிவிக்கவில்லை. (பி-2)

## லைபீரிய புதிய ஜனாதிபதியின்

# சமாதான முயற்சியில் முன்னேற்றமில்லை

(மன்ரோவியா)

லைபீரியாவின் புதிய ஜனாதிபதி மோஸஸ்பிளாவிற்கும், பிரிவினைவாத கெரில்லாக்களுக்குமிடையில் கானா நாட்டில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் தீர்மானங்கள் எதுவுமின்றி முடிவுக்கு வந்துள்ளது.

கெரில்லாக்களின் உயர்மட்டக் கோரிக்கைகள் காரணமாக பேச்சுவார்த்தைக்ளை இடைநிறுத்தி விட்டு லைபீரிய ஜனாதிபதி மீண்டும் நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இதுவரை விநியோகிக்கப்படாமல் இருந்து வந்த சர்வதேச நாடுகள் மூலம் கிடைத்து வந்த உணவு மற்றும் மருத்துவ பொருட்கள் தற்போது லைபீரியாவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

லைபீரியாவில் இயல்புவாழ்க்கை மெதுவாக வழமைக்கு திரும்பி வரும் நிலையில் 2ஆம் கட்டமாகவும் நைஜீரியத் துருப்புக்கள் அங்கு தரையிறக்கப்பட்டுள்ளன. (பி-9)

## நீர்கொழும்புப் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸாருக்கு எதிராக நேற்று முன்தினம் பொது மக்கள் நகரின் மத்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்யாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

எனினும், குறிப்பிட்ட இந் நபர் நகரைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதால், அவரை கைதுசெய்ய முடியாதுள்ளது என நீர்கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.மாரசிங்க தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## சமாதான எதிர்ப் பிரசாரத்தை சிஹல உறுமய ஆரம்பித்தது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கையின் மூலம், எதிர்காலத்தில் நாடு முகம் கொடுக்கப் போகும் பிரச்சினைகள் குறித்து சிஹல உறுமய கட்சியினர் நாடளாவிய ரீதியில் மக்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

இதன் முதல் கட்டமாக குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் கட்சியின் செயலாளர் திலக்கருணாரட்ன தலைமையிலான குழுவினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இது பற்றி கட்சிச்செயலாளர் திலக்கருணாரட்ன கருத்து வெளியிடுகையில்,ஐக்கிய் தேசிய முன்னணி அரசாங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழீழத்தை வழங்குவதற்காகவே போலியான சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தின் மூலம் தமிழீழவிடுதலைப்புலிகள் படைபலம் மட்டுமன்றி அனைத்து விடயங்களிலும் பலம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்,விடுதலைப்புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றவே அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றது.

இந்த நிலை தொடருமானால் இலங்கை இரண்டாகப் பிளவுபடும் காலம் வெகுதொலைவில் இல்லை. இதனால் தமிழ், முஸ்லிம்,சிங்கள மக்களின் உயிர்களுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

இதனைத் தெளிவுபடுத்தவே நாம் தற்போது பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம் என்றார். (உ-10)

## ஆசிரியர் மாணவர்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உதைபந்தாட்டப் பயிற்சி முகாம்களை இம் மாதம் 16 ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றது. எதிர்வரும் 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான இப்பயிற்சி முகாம் பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக ஆசிரியர்களுக்கான 5நாள் பயிற்சி முகாம் கடந்த 16 ஆம் திகதி முதல் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சி எதிர்வரும் 20ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது.

ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் நிறைவுபெற்றதும் மாணவர்களுக்கான பயிற்சிமுகாம்கள் 21 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

இதில் வலிகாமம் மாணவர்களுக்கான பயிற்சி முகாம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

வடமராட்சி மாணவர்களுக்கான பயிற்சி முகாம் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் 27ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரையும், தென்மராட்சி மற்றும் தீவுப் பகுதி மாணவர்களுக்கான பயிற்சி முகாம் யாழ்.மத்திய கல்லூரியில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகளை இங்கிலாந்தில் இருந்து வருகைதந்துள்ள சர்வதேச தரம்பெற்ற ஆற்றல் அனுபவம் வாய்ந்த எஸ்.பிரான்ஸிஸ் நடத்தி வருகின்றார். (உ-110)

## அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கும் அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

தேசிய உளவுப்பிரிவு மற்றும் விசேட விசாரணைப்பிரிவின் புலனாய்வுத் தகவல்களை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்னவை சிறைச்சாலைக்குள் வைத்து கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இவ்விடயம் குறித்து தமக்கு பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு உள்த்துறை அமைச்சர் பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார். (தி)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பிரச்சினைக்கு வெகுஜனப் போராட்டம் மூலமே தீர்வு

### சிவாஜிலிங்கம் எம்.பி.கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம் தொடர்பாக, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துடன், வடக்குக் கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் இணைப்பாளர் மற்றும் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் நேற்று கலந்துரையாடினர்.

இச்சநதப்பின் போது வெகுஜனப் போராட்டம் மூலமே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், நாடாளுமன்றக் கூட்டத்தின் தொடரில் இது பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை மிக விரைவில் கொண்டுவந்து, அச்சந்திப்பில் பிரதமருடனும் கல்வியமைச்சருடனும், கல்விச்சேவை ஆணைக்குழுவுடனும் இவ்விடயம் குறித்துக் கதைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்குக் - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்திற்கு முழு ஒத்துழைட்பையும் தாம் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# செய்தித் துளிகள்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அரசியல துறை செயலகத்தில் நடைபெறவுள்ள இக்கூடடத்திற்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிறகுட்பட்ட சகல விளையாட்டுக் கழகஙகளையும், விளையாட்டுத் துறை ஆர்வலர்களையும் கலந்து கொளளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி-36)

## நீர்வாழ் உயிரினங்களின் பெயர்கள் பட்டியலிடுகை

(கொழும்பு)

கரையோரத்தை அண்மித்த நீர்வாழ் உயிரினங்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்கு கடற்தொழில் கடல்வள அமைச்சர் மகிந்த விஜயசேகர நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிறைகுறைந்த நீர்வாழ் உயிரினங்களைப் பிடிப்பதைத் தடுக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

இதன்படி தடைசெய்யப்படும் நீர்வாழ் உயிரினங்களைப் பிடிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்டும் எனவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார். (தி)

## சிறுவர் தொடர்பான திட்டங்கள் விஸ்தரிப்பு

(கொழும்பு)

சிறுவர் உரிமைகள் தொடர்பான 10திட்டங்களை 14மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் யுனிசெவ நிறுவனம் துரிதப்படுத்தவுள்ளது.

நோர்வே மற்றும் ஜேர்மனியில் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அமைவாக யுத்தப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் இத திட்டங்கள் துரிதப்படுத்தப்படவுள்ளன என மேற்படி நிறுவனம விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்வி,சுகாதாரம் மற்றும்சிறுவர்களைப் போராட்டங்களில் ஈடுபடுத்துவதைத் தடைசெய்வது உட்பட10 திட்டங்களே துரிதப் படுத்தப்படவுள்ளன. (தி)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

(கந்தரோடை)

சுன்னாகம் பகுதியில் யுனஸ்கோ அனுசரணையுடன் ரி.ஆர்.ஆர்.ஓ. வின் எயிட்ஸ் விழிப்புணர்வுத்திட்டக் குழுவினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள நடத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் பரவலாக வழங்கப்பட்டுவருகின்றன. ( பி-103)

## கடல்வள ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த(சா/த) பரீட்சையில பாடசாலை மூலமாக கடல்வளட் பாடத்திற்கு தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்குத்தயாரப் படுத்துவது தொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமை மு.ப.8.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார்,முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடல்வளப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-8)

## திலீபன் மருத்துவமனையில் 1700பேர் சிகிச்சை

(மருதங்கேணி)

பூநகரி சாமிப்புலம் தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையில் ஆடி மாதம் ஆயிரத்து700 நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் காய்ச்சல்,கண்,காது வியாதிகள்,தொய்வு போன்ற வியாதிகளுக்கும் சிகிச்சை பெற்றுள்ளனர். (பி-35)

## பவுசர் மூலம் குடிநீர் வழங்கக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல்,சுருவில் கிராமத்திற்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது புளியங்கூடல்,சுருவில் பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனை நிவிர்த்து செய்வதற்கு ஏற்ப குடி நீரினை பவுசர் மூலம் வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-75)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகப் பதில் பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-18)

## பிரதமர் 23ஆம்திகதி இந்தியா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை இந்தியாவுக்கு பயணமாகின்றார்.

இந்தியாவில் இரண்டு நாட்கள தங்கியிருக்கும் பிரதமர் ரணில விக்கிரமசிங்க தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் பிரதமர், அங்கு கலாநிதி சுவாமிநாதன் நினைவுப்பேருரை ஒன்றையும் நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## லண்டனுக்கு கலாசாரப் பயணம்

(யாழ்ப்பாணம்)

''சலனசித்திரம்''அமைப்பின் பொதுச்செயலாளரும் திரைப்பட இயக்குநருமான க.தேவதாசன் கலாசாரச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் 24ஆம் திகதி இலண்டன் செல்லவுள்ளார்.

அமைப்பினால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ''யாருக்கு யார் காவல்''என்ற விவரணப்படத்தின் காட்சிகள் அவர் அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் காண்பிக் கப்படவுள்ளன.

அத்துடன், சலனசித்திரம் விரைவில் தயாரிக்கவுள்ள இலங்கையின்வரலாறு சம்பந்தமான ''அழகிய தீவின் அமைதிக்காக'' என்ற விவரணத்திரைப்படத்துக்கான குறிப்புகள் மற்றும் விபரங்களைத் திரட்டுவதிலும் அவர் அங்கு ஈடுபடுவார்.

இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் தற்போது இயங்கிவரும் அமைப்பின் கிளைகளை சர்வதேச நாடுகளில் ஆரம்பிப்பது தொடர்பாகவும்,ஈழத்து தமிழ்ச்சினிமாவின் எதிர்காலம் தொடர்பாகவும் அங்குள்ள துறைசார் வல்லுநர்களுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதுடன் புலம்பெயர்ந்த ஈழத்து கலை, இலக்கிய, சினிமாத்துறை அறிஞர்களையும் சந்தித்து உரையாடுவது இவரின் இலண்டன் பயண நோக்கமாகும். (உ)

## கடனுதவி

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களுக்கு, வன்னிப் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபா, சங்க அங்கத்தவர்களுக்கு சிறிய கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. (உ-35)

## மூன்று பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் யானைத்தந்தங்கள், துப்பாக்கிகள் என்பனவற்றை வைத்திருநத 3 பேரை சேரநுவர பொலிஸார் கடந்த சனியன்று கைது செய்துள்ளனர்.

சேரநுவர, தெஹிவத்தை, ஆசியங கேணி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர்சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசியகத் தகவலை அடுத்தே, இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக சேரநுவர பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (தி)

## கரைதுறைப்பற்றில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

(மருதங்கேணி)

கரைதுறைப்பற்று பிரதேசத்திலுள்ள 22 பாடசாலைகளில், 7 பாடசாலைகளில் மட்டும் ஆங்கிலஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

இதனால், ஏனைய 15பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் போதிக்க ஆசிரியர்கள் இல்லாது அவர்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-35)

## பெண்கள்அபிவிருத்தி கிராமமாக அல்லாரை

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அல்லாரைக்கிராமம் பெண்கள் அபிவிருத்திக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இணைந்து அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும் இதற்கென 5மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-36)

## ஊனமுற்றோர் பட்டியல் தயாரிப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவிலும் ஊனமுற்றோரின் பட்டியல் தயாரிக்கப்பட்டுவருகிறது.

யாழ்.கல்வியற்கல்லூரி பீடாதிபதியின வேண்டுகோளுக்கு இணங்கவே இவ் ஊனமுற்றோரின் விபரங்கள் திரட்டப்படுவதாக தெரியவருகிறது. (பி-35)

## நகைக்கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மனிப்பாய்ப் பகுதியில் உள்ள பிரேம் நகைக்கடையில் கடந்த சனியன்று இரவு பெறுமதிவாய்ந்த நகைகள் மற்றும் பெரும் தொகைப் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இது குறித்து நகைக்கடை உரிமையாளர் மானிப்பாய் பொலிஸில முறைப்பாடு செய்துள்ளார்.

5 இலட்சம் ரூபா பணமும் களவாடப்பட்டிருப்பதாக அந்த முறைபாட்டில தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ-16)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி கிராமத்தில் அம்டா நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்படும் சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று இடம் பெற்றது.

அம்டா நிறுவனத்தின் யாழ்.திட்ட இணைப்பாளர் கிரோயுகி ஒக்காசகி அடிக்கல்லை நாட்டிவைத்தார்.(உ)

## இரத்தினபுரியில் சுற்றிவளைப்பு 67 பேர் கைது

(கொழும்பு)

இரத்தினபுரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 67 பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பல்வேறு குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என்பதுடன், இவர்களில் 40 பேருக்கு எதிராக நீதிமன்றம் பிடிபிறாந்து பிறப்பித்திருந்தது என இரத்தினபுரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தே[illegible] மாலிமட தெரிவித்தார்.

இதற்கிடையில் கொழும்பு மாவட்டத்தை அண்டிய பிரதேசங்களில் கடந்த இருநாட்களாக மேற்கொள்ளப்பட்ட திடீர்சுற்றி வள்ளைப்புக்களின் போது பலர்கைது செய்யப்பட்டது தெரிந்ததே. (தி)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு,சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும 22ஆம்திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

10நாட்கள் தொடர்ந்து இத்திரு விழா இடம் பெறவுள்ளது. (உ-10)

# வீரசிங்கம் மண்டப ஆளுமை குறித்து

# விளக்கம் கோருகிறது க.கா.குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபம் தொடர்பான முழு விபரங்களையும் சேகரிக்கும் பணியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ் அலுவலகம் ஈடுபட்டுள்ளது.


கடந்த 16ஆம் திகதியன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற 81ஆவது கூட்டுறவுத் தின விழாவின்போது புலிக்கொடி ஏற்றப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு ஏதுவாகவே, இவ்விபரத் திரட்டல் இடம்பெறுவதாக அறியப்படுகிறது.

இந்த வகையில், நேற்றைய தினம் மு.ப.11.00 மணியளவில் யாழ். செயலகத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி டொக்பின் அக்னாஸ் செயலக உயரதிகாரிகளிடம் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அப்போது மேற்படி வீரசிங்கம் மண்டபமானது அரசினுடைய ஆளுகைக்குட்பட்டதா? அல்லது தனியாருக்குச் சொந்தமானதா? என்பது குறித்தும் வினாக்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

அதற்கு இது கூட்டுறவுச் சபையின் ஆளுகைக்குட்பட்டது எனவும், அதன்கீழ் நிர்வகிக்கப்படுகிறது எனவும் செயலக அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை, விழாவன்று பிற்பகல் வேளையில் சம்பவ இடத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர், கூட்டுறவுச் சபைத் தலைவரிடம், புலிக்கொடி ஏற்பட்டமை தொடர்பில விசாரணை மேற்கொண்டதும், எனினும் விழா முடிவடைந்த பின்னரே புலிக்கொடி இறக்கப்பட்டதும இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)




## ஹொக்கிப் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி

ஹொலண்டில் நடைபெற்று வருகின்ற ஹொக்கி சம்பியன் சிப்போட்டிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜேர்மன் அணியுடனான ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் இந்திய அணி ஜேர்மன் அணியை 3:2என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை, இப்போட்டியில் வேறு இரு ஆட்டங்களில் கொலண்ட் மற்றும் பாக்கிஸ்தான் அணிகளும் வெற்றிபெற்றுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் இந்திய அணி சிறப்பாகச் செயற்படும் என்ற எதிர்பார்ப்பின் மத்தியில் முதலாவது போட்டியில் இந்தியஅணி வெற்றி பெற்றிருப்பதால் இந்திய அணியின் ரசிகர்கள் மிக சந்தோஷமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-68)

## தென்மராட்சியில் விளையாட்டுக் குழு அமைப்புக் கூட்டம்

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்கள், ஆர்வலர்களையும் உள்ளடக்கியதாக தென்மராட்சி பிரதேசத்தின் விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைப்பதற்கான கூட்டம் நாளை புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குத் தென்மராட்சிப் பரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 5 உறுப்பினர்களையும் விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-68)

## 116 தங்கப் பதக்கங்களை வென்றது அமெரிக்கா

பனமாவில் இடம்பெற்று வருகின்ற ப்பான் அமெரிக்க விளையாட்டுப் போட்டிகளில் அமெரிக்கா தொடர்ந்தும் முதல் இடத்தில் இருப்பதுடன், மிக அதிகமான பதக்கங்களைத் தொடர்ந்தும் வென்று வருகின்றது.

முதலிடத்திலுள்ள அமெரிக்கா 116 தங்கப் பதக்கங்கள் உட்பட 272 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் மிக வலுவான நிலையில் உள்ளது.

இரண்டாம் இடத்தில் உள்ள கியூபா 72 தங்கப் பதக்கங்கள் உட்பட 152 பதக்கங்களைப் பெற்றிருக்கின்றது.

29 தங்கப் பதக்கங்கள் அடங்கலாக 127 பதக்கங்களை வென்றுள்ள கனடா, மூன்றாம் இடத்தில் உள்ளது. நான்காம் இடத்தில் 123 பதக்கங்களை வென்றுள்ள பிரேஸிலும், 5ஆம் இடத்தில் 79 பதக்கங்களை வென்றுள்ள மெக்சிக்கோவும் உள்ளன. (உ-68)

## கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திய வாஸ்

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்துப் பிராந்திய அணிகளான ஹம்ஷெயார் மற்றும் டேவ்ஷியார் அணிகளுக்கிடையிலான 45 ஓவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஹம்ஷெயார் அணி, ஆறு வக்கெடடுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான சமிந்தவாஸ் இந்தப் போட்டியில் ஹம்ஷெயார் அணிக்காக விளையாடி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

வாஸிற்கு முதல் முறையாக பிராந்திய அணியில் விளையாட இடம் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதல் துடுப்பெடுத்தாடிய டேவ்ஷெயார் அணி 45 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில், டீ.ஜீ.கொக் 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஹம்ஷெயார் அணி சார்பில் டேம் லெட் 26ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும், சமிந்தவாஸ்ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹம்ஷெயார் அணி 35.4 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட் டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (உ-68)

## அடையாளஅட்டை கண்டெடுப்பு

பற்றிமாவீதி, மாதகல் என்ற முகவரியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் மேரி ரோசலின் என்பவரின் தேசிய அடையாள அட்டை வழியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் 17ஆம் திருவிழாவான இன்று வி.சிவஞானசேகரத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

★ ★

நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசைத்தொடரில் இன்று மாலை 6.00மணிக்கு 'ஈழத்தில் முருகவழிபாடு' எனும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார். செல்வநாயகம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

★ ★

நல்லூர்க்கந்தன் வருடாந்த உற்சவத்தை ஒட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் மண்டப அரங்கில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'திருவிளையாடற் புராணம்' தொடரில் இன்று 'நெற்றிக்கண்' என்ற விடயம் பற்றி இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (உ-18)

## செய்தியாளர் தடுக்கப்பட்டு விடுவிப்பு

(மட்டக்களகப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பெபர் அரங்கில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டி தொடர்பான செய்தி சேகரிக்கச்சென்ற செய்தியாளர் இராணுவத்தால் தடுத்துவைக்கப்பட்டார்.

செய்தியாளர் தனது அடையாள அட்டையைக் காண்பித்தபோதும் அவர் சுமார் ஒருமணிநேரம் விசாரிக்கப்பட்டபின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, இவரை உள்ளே அனுமதிப்பது தொடர்பாக இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்ட பின்பே இவர் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பி-14)


## செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரமும் உடற்கல்வியும் பாட ஆசிரிய ஆலோகர்களுக்கு இம்மாதம் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை தேசிய கல்வி நிறுவகத்தில் நடாத்தப்படவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்திட்ட அதிகாரி யசீமா ஆதம் லெவ்வை அறிவித்துள்ளார். (18)

## நல்லூரான் திருவடிக்கு

### (இன்று பதினேழாம் திருவிழா)



### பாவியெனக் கருளாயோ?

அற்புதங்கள் செய்ய வல்ல
பெருந் தெய்வமே முருகா!
சொற் சிலம்பில் நின்றாடி
செய்கை பல காட்டும் கந்தா!
விற்பன்னர் கவி கேட்டு ஆனந்தக்
கூத்தாடும் அலங்காரக் கந்தா!
பற்பல பொருளில் கவிபாடி நிற்கிறேன்
பாவியெனக் கருளாயோ நல்லூரா?

இராம ஜெயபாலன், கொக்குவில்.

### நல்லூரானே நலம் தாருமையா

நல்லைப் பதிவாழ் முருகையா
நானிலத்திலும் நலம் வேண்டுமையா
தொல்லைகள் என்று நீங்குமையா
இல்லை என்று கூறாமல் தீருமைய்யா
வேல் தாங்கியுள்ள வேலையா
வேண்டும் வரங்களைத் தாருமையா
மால் மருகையா சூரசங்காரனே ஐயா
நல்லூரானே நலம் தாருமையா

இ.டினேஷ், கோண்டாவில்.

### நல்லாட்சி நல்கிடுவாய்!

நல்லையின் நாதனே நல்லருள் புரிந்திடுவாய்
எல்லையில் படும்துயர் எங்கும் பரவுதையா
தொல்லையில் வாழ்வைத் தொடரச் செய்திடவே
நல்லையில் இருந்து நல்லாட்சி நல்கிடுவாய்

குகதாசசர்மா-சிவகுமார், சுன்னாகம்.

### நல்வழி காட்டுமையா

தேவர் குலம் தழைக்க அசுரரை விஞ்சிய
வீர வேலாயுதன் நீ ஐயா
ஔவைக்குச் சுட்டபழம் காட்டிய
அழகுக் கந்தன் நீ ஐயா
அப்பன் சிவனார்க்கு தாரக மந்திரத்தை
உபதேசித்த முருகவேள் நீ ஐயா
கதிரமலை சார்ந்து குறவள்ளியைப்புணர்ந்த
மாயக் கிழவனும் நீ ஐயா
தேடி உனை நாடிச் சரணடைந்தோம்
நல்லையுறை ஆறுமுகா நல்வழி காட்டுமையா

நயினை விஜயன்.

### சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம் முருகா!

பிரணவப் பொருளை உரைத்தவா போற்றி
அரனவன் மகனே அற்புதா போற்றி
சரவண பவனென அழைத்துநாம் ஏற்றி
சிரமதை தாழ்த்தி வேண்டுறோம் போற்றி
வரமதை அருள்வாய் நல்பரகதி தருவாய்


முருகா உன் விழியாவும் உலகாளும்
அருள் வேண்டும் அடியார்க்கு,
பகவான் உன் கரம் ஈயும் - தமிழ்
மொழியாலே முருகாவென் றழைப்பார்கள்
திருவாயில்,
அழகான மொழிவாழும் வருகின்ற யுகமேழும்

செ.ஜமுனா





கடந்த மாதம் 2ஆம்திகதி நடை பெற்ற நுங்கோடை முருகன் ஆலய மகா கும்பாபிஷேக விழாவில் பிரதம குரு கும்பத்து நீரிரை தெற்கு வாசல் கோபுரக் கலசத்தில் ஊற்றுவதை முதலாவது படத்திலும், உலகநாத புஷ்பநாதக் குருக்கள், சமாதான நீதவான் அ. நாக முத்துவினால் சைவ பிரதிஷ்டா சிரோமணி எனும் பட்டம் வழங்கிக் கொளரவிக்கப்படுவதை இரண்டாவது படத்தி லும் காணலாம். (படங்கள்:வி.எஸ். கரிகாலன்)




உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டுவலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி மாணவி ஒருவருக்கு ஜீவாகாரம் வழங்குவதைக் காணலாம்.



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் லயன் விமலாஸ் நவரத்தி னமும், செயலாளர் லயன் க.சற்குணதேவனும் சாவகச் சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். அம்பிகைபாகனிடம் பாய்கள் அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம். (படம்: யாழ்.நிருபர்)

## காணி அமைச்சரின் யாழ். விஜயம்




# வீடுதேடி வந்து வாக்குக் கேட்டவர்கள் நாம்படும் துன்பம் கண்டும் வாளாவிருக்கின்றனர்

## பொற்பதிக் கிராம மக்கள் பல்கலை மாணவர்களிடம் மனக் குமுறல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பொற்பதிக் கிராமத்தில் புதிய இராணுவ முகாம் அமைத்தல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையின் முழு விபரம் வருமாறு,

17.8.2003 காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதிகள் குழுவொன்றும் வடமராட்சி கிழக்கு. குடத்தனை பொற்பதி கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாம்களைப் பார்வையிட்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ஒன்றரை வருடங்களின பின்னும் இப்பகுதிக் கிராம மக்களை தமது பாதுகாப்புக் கவசங்களாகப் பயன்படுத்தும் நோக்கோடு அக் கிராமத்தைச் சுற்றி வர இராணுவ முகாம் அமைக்க அப்பகுதி இராணுவத் தலைமையகம் திட்டமிட்டிருப்பது புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமை மீறல் என்பது அப்பகுதியைப் பார்வையிடும் போது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது.

அக்கிராம மக்களின் குடிசைகளிலிருந்து ஒரு சில மீற்றர் தொலைவில் சுற்றி வர-இராணுவமுகாம் அமைக்கப்படுவதால் அக் கிராம மககள் தம் அடிப்படைத் தேவைகளைப் பூர்ததி செய்வதில் கூட சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இக்கொடுமையைத் தாங்க முடியாத அப்பகுதி மக்கள் இதனை மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு போன்றவற்றுக்கு தெரியப்படுத்தினர். இவ்வாறு அவர்களால் அனுப்பப்பட்ட கடிதங்களை உடனடியாக வாபஸ்பெறுமாறு இராணுவத்தினர் தொடர்ந்தும் அம் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு முகாம் அமைப்பதை மக்கள் தடுத்து வருவதன் எதிரொலியாக கடந்த 14ஆம் திகதியன்று வீதியால் சென்ற அப்பகுதி இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். இதைவிட அவர்கள் கடலுக்குச் செல்வதற்கான பாஸ் நடைமுறைகளிலும் பாரிய கெடுபிடிகளை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது.

பாஸ் எடுக்காது கடலுக்குச் செல்வோர் சுடப்படுவார்கள் என எச்சரிக்கப்படுகின்றனர். இக்கெடுபிடிகளை நேரில் பார்க்கவென சென்ற எமது குழுவினரை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்.நாம் பல்கலைக்கழக மாணவர்கள் என்பதை உறுதிப்படுத்துமாறு இராணுவ அதிகாரியான பாலினட கேட்டுக் கொண்டதற்கேற்ப பல்கலைக்கழக அடையாள அட்டையை காட்டிய பின்பும் அனுமதிக்கவில்லை.

பின்னர்,இராணுவத்திற்கும் மாணவர்களிற்குமிடையே சில மணி நேரம் வாக்குவாதம் நடைபெற்றது. அதன் பின்னர் இராணுவத்தால் வரையறுக்கப்பட்ட சிறு பகுதியை மட்டும் சென்று பார்வையிடுமாறு அனுமதித்தபோது,மாணவர்கள் அதற்கு மறுப்புத்தெரிவித்து அவ்விடத்தில் இருந்து திரும்பி மீண்டும் கிராம மக்களோடு கலந்துரையாடினர். அப்போது அம் மக்களின் மன அழுத்தத்தை எம்மால் உணர முடிந்தது. இம்முகாம் அமைப்புத்தொடர்பாக அங்கு சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர்கூட அம்மக்களுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி இராணுவம் விரும்பிய இடங்களில் புதிதாக முகாம் அமைக்கலாம் என்று கூறியுள்ளனர்.

இவ்வாறு அம் மக்களிற்கு விளக்கமளித்த இதே கண்காணிப்புக் குழுவினர் நீண்ட காலமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுமாறு கோருவது எமக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

இது தவிர தேர்தல் காலத்தில் அம் மக்களின் வாக்குப் பெற்ற அமைச்சரோ அன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களோ இது விடயத்தில் கண்டும் காணாததுபோல் இருப்பது தமக்கு வேதனை அளிக்கிறது என அம்மக்கள் தெரிவித்தனர்.

எனவே இம்முகாம் அமைப்புத் தொடர்பாக உண்மை நிலையைப் புரிந்து அனைவரும் இம் மக்களின் இயல்பு வாழ்விற்காகக் குரல் கொடுக்க முன்வரவேண்டும் எனக்கேட்டு நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தராக நா.மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கடமையாற்றிய உத்தியோகத்தர் இடம்மாற்றம் பெற்றுச் செல்ல அந்த இடத்திற்காக நா. மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (பி...)

# மறுசீரமைப்பு செயற்பாடுகள் துரித கதியில் இடம்பெறும்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் இவ் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்கென உள்துறை அமைச்சு ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது.

மறுசீரமைப்புச்செயற்பாடுகளை அர்த்தமுடையதாக்குவதற்கும், துரிதப்படுத்துவதற்கும் உள்ளூராட்சி மட்டத்தில் திறமை மிக்க சேவையாளர்கள் அவசியம்.

இன்று அரச சேவையில் உள்வாங்கப்பட்ட அனைவரும் கட்டுப்பாடுகள் நிறைந்த அமைப்பு ஒன்றினுள்ளே அகப்பட்டுக்கொண்ட சிறைக் கைதிகள போல் இருக்கின்றனர் எனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# காணி அமைச்சரைக் கொல்லும் சதித்திட்டம் முறியடிப்பு

(கொழும்பு)

காணி அமைச்சர் ராஜித சேனரட்ணாவைப் படுகொலை செய்யத் திட்டமிட்டமை குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் சிறைச்சாலைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அதிகாரி மேலும் கருத்துத்தெரிவிக்கையில், பிரபல பாதாள உலகக்கோஷ்டி தலைவர் ஒருவரின் தலைமையிலேயே இத் திட்டம் தீட்டப்பட்டது.

குற்றப் புலனாய்வுப்பிரிவினால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களை அடுத்து இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## இன்று ஒரு தகவல்

# புளியின் மகத்துவம்

'' அந்த ஆளைக்கண்டாலே போதும்... எனக்கு வயிற்றில் புளிகரைத்தது போல் ஆகி விடும்'' என்று கூறுவது உண்டு ''இதோ இருக்கிறாரே- இவர் அந்த செய்தியைக் கூறிய பின்னர் தான் என்வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது'' என்றும் கூறுவது உண்டு. கறியில் புளி கரைப்பது சரி! அது என்ன வயிற்றில் புளி கரைப்பது.?''மிகவும் பயமுறுத்தி விட்டார்'' என்று கூறுவதற்குப்பதிலாக இப்படிக்கூறுவார்கள்.

அது சரி! புளி என்ன அவ்வளவு மோசமான பொருளா? சிலர் நினைப்பார்கள் புளியை சுவைக்காகத்தான் உணவில் சேர்க்கின்றோம் வேறு எந்த நன்மையும் அதனால் இல்லை. என்று அது தப்பு! அதனால் இன்று இந்த தகவல் நேரத்தை புளிக்காக ஒதுக்கி விட நினைக்கின்றேன்.

100கிராம் புளியில் பல்ப் (Pulp) 283 கலோரி சத்து இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். அப்படி இருக்கும் போது அதனைப்பற்றி கவனிக்காமல் இருக்க முடியுமா? புளிய மரத்திற்கு பூர்வீகம் ஆபிரிக்காவாக இருந்தாலும் தற்போது அது எல்லா இடமும் தாராளமாகக் கிடைக்கின்றது. சில மருந்துகளை உட்கொள்ளும் போது புளி சேர்க்கக்கூடாது என்பார்கள். ஆனால் புளியே ஒரு நல்ல மருந்து சார்!

தாகத்தைத் தணிக்க, பசியைத்தூண்ட, வீக்கத்தைக் குறைக்க இப்படி எல்லாவற்றிற்கும் புளியை பயன்படுத்தலாம். சுத்தமான நீரில் சிறிது புளியைக் கரைத்து ஆறு ஸ்பூன் காலை வேளைகளில் உட்கொண்டால் பசி அதிகரிக்கும். உடலில் எங்காவது வீக்கம், வலி இருக்கிறதா? புளியம் சாறில் உப்புக் கலந்து தேய்த்து விடுங்கள். தினம் இரு முறை இவ்வாறு செய்யவேண்டும்.

வெறும் புளியம் பழத்தை உண்டால் ஈறுகளில் இரத்தம் வருவது நிக்கும். ஜீரணக்கோளாறு பசியின்மை என்பவற்றுக்கும் புளி வைத்தியம் உள்ளது. என்ன தெரியுமா? நன்கு கொதித்து ஆறிய பாலில் நான்கு அல்லது 5 சொட்டுபுளிச்சாறு விட வேண்டும். இதனால் என்ன ஆகும் தெரியுமா? பால் பிரிந்து அடியில் தங்கி விடும். மேலே தண்ணீராக ஒரு திரவம் நிற்கும். அதனைத்தினம் மூன்று வேளை உட்கொள்ள வேண்டும். இது வெறும தண்ணீ அல்ல பாலில் உள்ள அத்தனை சத்தும் இந்தத் திரவத்தில் இருக்கும். அதேவேளை, சுலபமாக ஜீரணமாகும்.

தென்னிந்தியாவில் இருப்பவர்களுக்கு மாரடைப்பு, சிறு நீரகக்கோளாறுகள் மிகவும் குறைவு என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஏன்? சாம்பார், ரசத்தில் இவர்கள் தொடர்ந்து புளி சேர்ப்பதனால்தான்! புளியின் விதைகளைத் தூள் செய்து வைத்துக்கொள்ளலாம். அதிலும் சில மருத்துவக்குணங்கள் உள்ளன. இந்தத்தூளில் ஒரு மேசைக்கரண்டி எடுத்து தண்ணீர் கலந்து தினம் மூன்று வேளை உண்டால் வயிற்றுப் போக்கு சரியாகும். இதில் அரைமேசைக்கரண்டி எடுத்து சம அளவு தேன் கலந்து தினம் இரு வேளை, உட்கொண்டால் இரத்தப்போக்குக் குணமாகும்.

மேலும் இந்தத்தூளில் ஒரு கரண்டி தண்ணீர் சிறிது சீனி கலந்து தினமும் ஒரு வேளை, இரவு உணவிற்கு முன் உட்கொள்ள வேண்டும். இரு வாரத்திற்கு ஒரு முறை உட்கொண்டு வந்தால் சத்தியைத் தடுக்கலாம்.

புளியங் கொழுந்தை கறி சமைக்கலாம். அதில் விற்றமின் ஏ, சி, இரும்புச்சத்து எல்லாம் உள்ளது. புளியமரப் பட்டையை சுட்டுக்கரியாக்கி அதனைத் தூள் செய்து எண்ணெயில் குழைத்துத் தீப் புண்ணுக்குப்பூசலாம். விஷம் குடித்தவர்களுக்கு அடர்த்தியான புளிச்சாறு கொடுத்து வாந்தி எடுக்க வைக்கலாம். பத்து மில்லி தண்ணீரில் 6கிராம் பழுத்த புளியை இரண்டு மணி நேரம் ஊற வைக்கவேண்டும். இதை நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை கொடுத்தால் வாந்தி நிற்கும். ஆனால் ஒன்று இந்தக்கரைசலை ஒவ்வொரு முறையும் புதிதாகத் தயாரிக்க வேண்டும்.

புளிச்சாறு, கிராம்பு, இலவங்கப்பட்டை இவை மூன்றையும் தண்ணீரில் கரைத்து உட்கொண்டால் உணவுப்பாதையில் உள்ள அழற்சிகள் சரியாகும். 25 கிராம் புளியை 120 மில்லி தண்ணீரில் ஒரு மணித்தியாலம் ஊற வைக்க வேண்டும். அதன பின் 6 கிராம் சீனி சேர்க்க வேண்டும். இது எதற்கு மருந்தாகும் தெரியுமா? தலை லேசாகஇருத்தல் , Unsteady ஆக இருத்தல் போன்றவற்றுக்கு! மற்றதை மறந்தாலும் இதை மட்டுமாவது ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் இன்று ஒரு தகவலைத் தொடர்ந்து பார்த்து வரும் வாசகர்களுக்கு சில சமயங்களில் தேவைப்படலாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பணமோசடி புரிந்த வங்கி ஊழியர்கள் கைது

(கொழும்பு)

திருட்டுத்தனமாகப் பெறப்பட்ட காசோலையைக்கொண்டு தனியார் வங்கியில் இருந்து 57 இலட்சம் ரூபா பெறுமதியான பணத்தை மோசடி செய்த வங்கி உத்தியோகத்தர் அடங்கிய மூவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரபல வர்ததகர் ஒருவரது காசோலைப் புத்தகத்தில் இருந்து கிழித்தெடுக்கப்பட்ட இரு சாசோலைகளைக் கொண்டே இப்பண மோசடி இடம் பெற்றுள்ளது. இவற்றில் ஒரு காசோலை மூலம் கொட்டாஞ் சேனை தனியார் வங்கியிலிருந்து 18 இலட்சத்து 50ஆயிரம் ரூபாபெறப்பட்டுள்ளது. மற்றைய காசோலை மூலம் கொள்ளுப்பிட்டி வங்கியிலிருந்து 38 இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெற முயன்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

மோசடி மூலம் பெறப்பட்ட பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (தி-8)

# கட்சித் தலைவர்கள் சுற்றுப் பயணத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி புறக்கணிக்கும்

(கொழும்பு)

பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் மேற்கொள்ளும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் பங்குபற்றுவதில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

இது பற்றி எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ சபாநாயகருக்குக் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஜேர்மன், பிரான்ஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாராளுமன்ற கட்சித்தலைவர்கள் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப்பயணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி பங்குபற்றமாட்டாது.

அத்துடன், செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேரா தலைமையில் செல்லும் இப்பாராளுமன்ற குழுவில் பொதுஜன ஐக்கிய முன்னணியை பங்குபற்ற வேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சகல பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும மாதங்களில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தும் முகமாகவே ஜனாதுபதி இந்தத்தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-10)

# இனந்தெரியாதோரின் சூட்டுக்கு இரு முஸ்லிம்கள் பலி; சம்மாந்துறையில் சம்பவம்

## சம்பவ இடத்திற்கு ஹக்கீம் விரைவு

(கொழும்பு)

சம்மாந்துறை சேனைவெட்டிப் பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்களினால்இரு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்ரால் லெப்பை(வயது40) கே.ஸ்மைல் (வயது24) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை மேற்படி பிரதேசத்துக்குச் சென்ற மக்கள் இருவரது சடலங்களையும் கண்டுபிடித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து சடலங்களைப பொலிஸார் மீட்டனர்.

இக்கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இவ் விருவரினதும் சடலங்களுக்கு அருகில் இவர்கள் பயணம் செய்தது எனச் சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பூரண விசாரணை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் ஆனந்த லேவன்கம சம்மாந்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில் முஸ்லிம் விவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூக் ஹக்கீம் நேற்று சம்மாந்துறைப் பிரதேசத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள், பாதுகாப்பற்ற நிலவரங்கள் குறித்து நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார்.

கடந்த 13ஆம்திகதி மூதூர் செல்வநாயகபுரம் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப் பட்ட துடன் மூதூர் நாவலடிக்கடலில் வைத்து இரு முஸ்லிம் மீனவர்கள் கடத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதும் தெரிந்ததே. (தி)

## இராசி பலன்

**19. 08. 2003**

**(ஆவணி 02, செவ்வாய்)**

சப்தமி - பி.ப. 5.19 வரை

பரணி- மாலை 6.58 வரை

இராகுகாலம் - 3.05-4.35

சுபநேரம் - 10.35-12.05

**மேடம்**
போசன சுகம், வெகுமானம், கௌரவம், மனமகிழ்ச்சி.

**இடபம்**
காரிய அலைச்சல், மனோ சங்கடம், அதிக செலவு, பொருள் விரயம்.

**மிதுனம்**
நல்ல வரவேற்பு, காரிய சித்தி, தொழில் இலாபம், உடல் நலம்.

**கடகம்**
அதிக பிரயாசை, இஷ்ட சித்தி, பெரியோரால் மதிக்கப்படல், புத்திசாதுரியம்.

**சிங்கம்**
கட்டுப்படுதல் எதிர் பாராத செலவு, காரிய தாமதம், வேலையில் மந்த நிலை.

**கன்னி**
முயற்சி தாமதம், கலகம், சரீர பீடை பொருள் விரயம்.

**துலாம்**
மனோ சௌக்கியம், எடுத்த காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, தன வரவு.

**விருச்சிகம்**
நினைத்த காரியம் கைகூடும், தேக நலம், தொழில் விருத்தி, சத்துரு ஜெயம்.

**தனுசு**
காரியதாமதம், தாழ்ந்த சுபாவம், குடும்பக் கவலை, உடல் நலக்குறைவு.

**மகரம்**
ரோக பயம், மனச் சஞ்சலம், வேலைக் கஷ்டம், காரிய தாமதம்,

**கும்பம்**
மனோ தைரியம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி.

**மீனம்**
அதிக செலவு, மனோ சங்கடம், முயற்சி தாமதம், பெரியோர் ஆதரவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# அரச காணிகள் விற்பனைக்கு எதிராக நடவடிக்கை

## பிரதமரின் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை, நிலாவெளி, கும்புறுபபிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள அரச காணிகளவிற்பனை செய்யப்படுவது குறித்து நடவடிக்கை எடுக்கபபடும் என பிரதமரின் செயலாளர் பிரட்மன்வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன அனுப்பிவைத்த கடிதம் குறித்துப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், மேற்படி உறுப்பினரின் கடிதம் நேற்றுமுன்தினம கிடைக்கப் பெற்றதாகவும், இவ்விடயம் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இதேவேளை, மாபிள் பீச்கடற்கரையோர காணிகளுமமுறையற்ற வகையில் வெளியாருக்கு விற்பனை செய்யப்பட்டுவருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு

# தினமுரசுப் பத்திரிகை எரிப்புக்குக் கண்டனம்

(கொழும்பு)

எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு எனப்படும் பாரிஸ் நகரத்திலிருந்து இயங்கும் சர்வதேச செய்தியாளர் உரிமை ஸ்தாபனம் தினமுரசு பத்திரிகை மீதான அவதூறுகள் பற்றிக் கண்டனம தெரிவித்துள்ளது. தமிழ் மக்கள் பல்வேறு செய்தி மூலங்களையும் படிக்கவேண்டியது அவசியம் என்றும் அது தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் மட்டக்களப்புப் பகுதியில் தினமுரசு விநியோக வாகனத்தை இடைமறித்து 5 ஆயிரம் பிரதிகளை தீயூட்டி எரித்த சம்பவத்திற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தினமுரசுப் பத்திரிகையின் செய்தியாளர்கள், பணியாளர்கள், விநியோகஸ்தர்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கோரி மேற்படி அமைப்பு சு.ப. தமிழ்ச்செல்வனுக்குக் கடிதமொன்றை எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ)

## முன்பள்ளி ஆசிரியர்களின்

# வேதனப் பற்றாக்குறையைத் தீர்க்க அரச சார்பற்ற அமைப்புக்கு அழைப்பு

(ஊர்காவற்றுறை)

குறைந்த வேதனத்துடன் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்கு. அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் கி. கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

அண்மையில் சுருவில் ஐயனார் சனசமூக நிலைய பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு அங்கு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் குறைந்த வேதனத்துடன் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுவரை முன்வரவில்லை. இவர்களுக்கு கிராம மட்ட அமைப்புக்களும் பெற்றோரும் குறைந்த அளவு சம்பளத்தையே வழங்கி வருகிறார்கள்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மேற்படி சம்பளம் அவர்களின் ஆடைகளைத் துவைப்பதற்குச் சவர்க்காரம் வாங்குவதற்கே போதியனவாக இல்லை. இன்னிலையைக் கவனத்தில் எடுத்து அவர்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்றார்.

மேற்படி நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவம், தீவக வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த. தவராஜா, கிராம அலுவலா மு.விஜயரத்தினம் உட்பட பெருந்தொகையான மக்களும் கலந்து கொண்டனர். (பி-75)

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்
-குறள்

வலம்புரி

## ஹக்கீமின் மிரட்டல்

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தாவிடில், அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கப்போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெறுகின்ற முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் மற்றும் கடத்தல் சம்பவங்களை அடுத்து ஆவேசமடைந்த அமைச்சர் ஹக்கீம், முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களுக்கும், கடத்தல்களுக்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்ற முடிவோடு தனது கருத்தை முன் வைத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் மீது இடம்பெறுகின்ற தாக்குதல்களையும், கடத்தல் சம்பவங்களையும் எவ்வகையிலும் நியாயப்படுதத முடியாது. இந நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், சகல இனங்களும் சம உரிமையோடு வாழ வேண்டும்.எல்லா இனங்களினதும் சுதந்திரம், இறைமை பாதுகாக்கப்பட வேண்டும். இதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது.

ஓர் இனத்தின் சுதந்திரம் இனனொரு இனத்தின் உரிமையைப் பாதிக்குமாயின் அது மீண்டும் ஓர் ஆயுதப் போருக்கே வித்திடும்.இ·து இலங்கைக்கு மட்டுமல்ல-உலக வரலாற்றில் கண்டறியப்பட்ட அனுபவமும் கூட.

எனவே, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமான தொன்றாகும்.ஆனால் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது-அவர்கள் கடத்தப்படுகின்றனர் என்பதற்காக அதனை விடுதலைப் புலிகளே செய்கின்றனர் என்ற அமைச்சர் ரவூப் ஹக்கீமின் முடிவு மிகப் பெரும் ஆபத்தானதாகும். அது மட்டுமன்றி எழுந்தமானமாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நீண்ட காலமாக இருக்கும் சகோதரத்துவ உறவுக்குப் பங்கமாக அமையும் என்பது இங்கு நோக்குதற்குரியது.

இதேவேளை கிழக்குமாகாணத்தில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதை இனங்காண்பது காலத்தின் கட்டாய தேவையாகும். இதற்காக அரசு பகீரத முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ் வேளையில், தமிழ் முஸ்லிம் மக்களிடையே பகைமையை ஏற்படுத்தி சமாதானமுயற்சிகளைக் குழப்புவதில் சில தீய சக்திகள் ஈடுபட்டு இருக்க முடியும்.ஆகையால் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் தீய சக்திகளை இனங் கண்டு அதனை பகிரங்கப்படுத்த அரசு தவறுமாயின் அதன் விளைவு பாரதூரமாக அமையும்.

# தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படுபவர்களை அங்கீகரிக்க முடியாது

## சு.ப.தமிழ்ச் செல்வன் பி.பி.சிக்குப் பேட்டி

(லண்டன்)

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தமிழ்மக்களின் எதிர் காலத்தைப் பற்றி சிந்திப்பவர்கள். அந்த ரீதியில் எமது இனத்தின் எதிர்கால சுபீட்சத்திற்கு எதிராகச் செயற்படுபவர்களை, அவர்களது அரசியல் இலக்குகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈழவிடுதலைப் போரில் 80ஆயிரத்திற்கும் மேறபட்ட தமிழ் மக்கள் இறந்திருக்கின்றனர். 17 ஆயிரத்து 690 வரையான இளந்தலைமுறை ஈழத்திற்காக உயிரைக் கொடுத்திருக்கிறது. உயிர் அர்ப்பணிப்புக்களின் மத்தியிலும், பெரும் அவலத்தின் மத்தியிலுமே எமது இனம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

இந்த நிலையில், எமது இனத்தின எதிர்காலத்திற்குத் தடையாக இருப்பவர்களை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அந்தவகையில் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி அண்மைக் காலமாக தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்படுகின்றபொழுது அக்கட்சியினரே அவரைக் கட்சியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் நாங்கள் உட்கட்சி நடவடிக்கைகளில் தலையிடப் போவதில்லை. அந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவோம்.

இதேவேளை, சமாதானச் சூழலில் இடம்பெற்றுவரும் படுகொலைகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. எமது போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் நிராயுதபாணிகளாகவே செல்கின்றனர். எங்களுடைய அரசியல் வேலைத்திட்டத்திற்காக நாங்கள் செல்கின்றபோது இராணுவச் சோதனைச் சாவடிகளில் சோதனைக்குட்படுத்தப்படுகிறோம். இவ்வாறு இருக்கும்போது ஆயுதங்களை எடுத்துச்செல்வது என்பது சாத்தியமில்லை.

அதேவேளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ் இருக்கிறது. ஏனைய குழுக்கள் இருக்கின்றன. இராணுவப் புலனாய்வு அமைப்புகள் இருக்கின்றன. கண்காணிப்புக்குழு இருக்கிறது. இவ்வாறெல்லாம் இருக்கும்போது எமது போராளிகள் ஆயுதங்களைக் கடத்திச சென்று படுகொலைகளைச் செய்வதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்களே கொலை செய்யப்படுவதை நாங்கள் அறிகிறோம். அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல போராளிகளும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நற்பெயரைக் கெடுப்பதற்கும், சர்வதேச அளவில் அவர்கள் பெற்றுவரும் அங்கீகாரத்தைப் பொறுக்க முடியாதவர்களுமே இப்படியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். இக்கொலைகள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிய நாங்கள் பூரண ஆதரவு வழங்குவோம் இவ்வாறு தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்தார். (த)

## மூதூர் பிரதேச பாதுகாப்பை உறுதிசெய்ய

## மேலும் 100 ஊர்காவல்படை வீரர்கள்

## அங்கு அனுப்புவது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

மூதூர் பிரதேசப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென மேலும் 100 ஊர்காவல் படையினரை ஈடுபடுத்துவது குறித்து உள்துறை அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சின் செயலாளர் எம்.என். யுனைட் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவுடன் உள்துறை அமைச்சு ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப்ஹக்கீம், உள்துறை அமைச்சரின் செயலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது கேட்டுக்கொண்டதற் கிணங்கவே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

எனினும், இப்பிரதேச பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென ஏற்கனவே 100 ஊர்காவற்படை வீரர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனால், மேலதிக வீரர்களைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்துவதற்குப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவு தேவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி நிலைமை காரணமாகவே புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதில் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது எனவும், எவ்வாறாயினும், பிரதேசத்தின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மேலும் 100 பேர் இக்கடமையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (தி)

## மக்களைப் பாதிக்காதவகையில்

## தேர்தல் முறை அமையவேண்டும்

## தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

சிறுபான்மை இனமக்களையும், கட்சிகளையும் பாதிக்காத வகையிலேயே புதிய தேர்தல் முறை உருவாக்கப்பட வேண்டும் என தமிழ்க் கட்சிகள் கோரிக்கைவிடுத்துள்ளன.

இது தொடர்பாக புளொட்அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள தமிழ்மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதிக்காத வகையில் புதிய தேர்தல் முறை உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் மீண்டும் ஏற்படாதவண்ணம் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறினார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையக பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதிக்காதவகையிலும், சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவம் பாதிக்காத வகையிலும் தேர்தல் முறை உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் அதனை எதிர்க்கவும் தயங்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சிறுபான்மை மக்களுக்கும் சிறிய கட்சிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே புதிய தேர்தல்முறை கொண்டுவரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்பதாக தேர்தலை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவிக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (தி)

### தினசரி தியானம்

## ஒத்திப் போடாதீர்கள்

காலம் தாழ்த்துதல் நேரத்தைத் திருடுதல் ஆகும். நாளை என்பது மீண்டும் எப்போதும் வராது. எக்காரியம் ஆற்றுவதற்கும நாளை என்பது மிகவும் தாமதமானது. உதவியும் வெற்றியும் நாளை கிட்டும் என்று எதிர்பார்க்கின்றவர் இன்று வீழ்ச்சியடைகிறார். அறிவாளி இன்றே நேரத்தில் எழுந்து பிரார்த்தனையைத் தொடங்கி தியானம்செய்து தன் இலட்சியங்களுக்கான செயல்களைச்செய்து இன்றே ஆற்றல், அமைதி, வெற்றி ஆகியவைகளை அடைகிறார். இன்று காலையில் செய்யக்கூடியவற்றை மாலைக்குத் தள்ளிப் போடாதீர்கள். நாளை என்பது முட்டாள்களின் பஞ்சாங்கத்தில் உள்ளது.

சுவாமி சிவானந்தர்

## வைத்தியர் பற்றாக்குறையை நீக்க உடனடி நடவடிக்கை

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையைத் தீர்பபதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தூர இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தீர்க்கும் முகமாகவே இந்நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், இதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (தி)

## யாழ். நிலைவரத்தை அறிய ஆஸி.தூதுக்குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியத் தூதுக்குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயாஸ்தானிகராலய பிரதித் தூதுவர் ஹெட்லேஹான் தலைமையிலான இக்குழு, அன்றைய தினம் மு.ப.10 மணியளவில் யாழ். செயலக அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பொன்றினை நிகழ்த்தவுள்ளது.

இதன்போது, யாழ். குடாநாட்டின் தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றியும், எதிர்காலத்தில் அவுஸ்திரேலிய அரசு யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது. (உ-4)

## வேலை நிறுத்தத்தின் எதிரொலி!

## யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நீர் விநியோகம் தவிர, அனைத்துப் பணிகளும் நேற்று ஸ்தம்பிதம் அடைநதன.

சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட 21 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 12ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்ததும் இதற்கு ஆதரவாக பல்கலைக்கழகங்களின் அனைத்துப் பணியாளர்களும் படிப்படியாக போராட்டக் களத்தில் குதித்திருப்பதும் தெரிந்ததே.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழகததில் இடம்பெறவிருந்த அனைத்துப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகப் பதில் பதிவாளர் அறிவித்துள்ளார்.

விடுதியில் தங்கியிருக்கின்ற மாணவர்களின் நலன் கருதி, அவசியத்தின் அடிப்படையிலேயே நீர்விநியோகப் பணிகள் இடம்பெறுவதாகவும், மாணவர்கள் முற்றாக வெளியேறும் பட்சத்தில் இப்பணியும் இடைநிறுத்தப்படும் எனவும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## கிளிநொச்சி நியாப் திட்டங்களை

## உலகவங்கி உயர் அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்

(மருதங்கேணி)

உலகவங்கியின் உயர் அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்டு நியாப்திட்ட வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

உலக வங்கியின் உயர் அதிகாரி நிஹால் பெர்ணாண்டோ, உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி, கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் ஆகியோர் உருத்திரபுரம் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மூன்று கிணறுகள், பொது மண்டபம் ஆகியவற்றையும் பார்வையிட்டார். (பி-35

# பாரிஸில் புலிகள் எடுக்கும் இறுதி முடிவை அறிய எரிக் சொல்ஹெய்ம் 27ஆம் திகதி அங்கு செல்கிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபு குறித்து எதிர்வரும் 21ஆம் திகதி பாரிஸில் ஆரம்பமாகவிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், சட்ட வல்லுநர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் இறுதிக் கட்ட முடிவை அறிந்துகொள்வதற்காக நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் 27ம் திகதி பாரிஸ் பயணமாகவுள்ளார்.

பாரிஸில் நடக்கவிருக்கும் மேற்படி பேச்சுவார்த்தைக்கான புலிகளின் பயண ஒழுங்கு மற்றும் பல ஏற்பாடுகளை நோர்வே கவனித்து வரும் அதேவேளை, இப் பேச்சுவார்த்தைகளில் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கலந்துகொள்ளமாட்டார் என நோர்வேத் தூதரக ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துக் கடந்தவாரம் விடுதலைக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மற்றும் பல பிரதிநிதிகளுடனும் ஜப்பான் தூதுவர் உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் கீழுள்ள முகவர் நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருடன் சொல்ஹெய்ம் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டமை தெரிந்ததே.

மேற்படி பேச்சுவார்த்தைகளில் நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கலந்துகொள்ளாவிட்டாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னேற்றகரமான முறையில் முன்னெடுப்பதற்குரிய இறுதி முடிவு நோர்வே ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்ககப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# கணனிக்குச் சவால் விடுக்கும் புதிய வைரஸ் வேகமாக பரவுகிறது

(லண்டன்)

உலகெங்கிலுமுள்ள கணனிகளை 'W 32 Blaster' என்ற புதிய தொரு கணனி வைரஸ் தற்போது பரவலாகத் தாக்கி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய வைரஸ், கணனிகளைத் தாக்கி அவற்றைச் செயலிழக்கச் செய்வதுடன், சில தற்காலிக செயலிகளைச் கணனியில் பதிவு செய்து விடுவதால் எதிர் காலத்திலும் அக்கணனிகளைப் பாதிப்புக்குள்ளாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வீட்டில் அல்லது அலுவலகங்களில் பாவிக்கப்படும் கணனிகள் சில நிமிடங்களுக்கொருமுறை தானாகவே அணைந்து போவதை அவதானித்தால், அல்லது சில மென்பொருட்களை உபயோகிப்பதில் புதிய சிரமங்களை அவதானித்தால் உடனடியாக Micro Soft அறிமுகம் செய்துள்ள Patch file ஐ உபயோகித்து அவர்கள் கூறும் சில வழிகளை நடைமுறைப்படுத்தி இந்தக் குழப்பங்களைச் சரிசெய்யலாம எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனணியின் தரவுத்தட்டில் தானாகவே MS Blast.exe என்ற இயக்கியை தரவிறக்கம் செய்து இதை நிரந்தரமாகக் கணனியிலிருந்து நீக்காத விடத்து இது எதிர் காலத்தில் கணனியைச் செயலிழக்கவோ அல்லது தரவுகளை அழித்துவிடும் வாய்ப்புகளை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது. (உ-18)

# தையல் மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையும் உடுப்பிட்டி மத்தி மகளிர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் ''அடிப்படைத் தையல் மனையியல் பொருட்காட்சியும் விற்பனையும் நாளை மு.ப.10 மணிக்கு யாழ்உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில ஆரம்பமாகவுள்ளது.

எஸ்.தயானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி, யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர். பி.கனகசபாபதி, யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கே.முருகநேசன்,கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.வீரகத்திப்பிள்ளை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி .ஆர்.குட்டித்தம்பி, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைச் செயலாளர் எஸ்.சிவசுப்பிரமணியம்,யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கச் சமாச செயலாளர் ரி.நகுலேஸ்வரன், யாழ்.மாவட்ட மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி எஸ்.வேதவல்லி, உடுப்பிட்டி தெற்கு கிராம சேவையாளர் எஸ்.சிவநேசன், கூட்டுறவுப் பரிசோதகர் வி.இரத்தினகாந்தன், மற்றும் கரவெட்டி வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.ஜெயகௌரி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-8)

## பாலத்தினுள்...

காலை இதனைக் கண்ணுற்ற பொது மக்கள் பொலிசாருக்கு அறிவித்தனர். இதனையடுத்து சடலம் யாழ்.போதான வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப் பாலத்தின் அருகே இராணுவக் காவலரண் ஒன்றும் இருப்பதுடன் மேற்படி பாலத்தில் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு பயணிகள் வான் ஒன்றும் விபத்துக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது. (உ-59,110)

## காணி...

மொன்று அம்பலத்திற்கு வந்ததையடுத்தே அவரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதி ஒருவரிடம் இருந்து கிடைத்த தகவலை அடுத்து இக் கொலைத் திட்டம் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வு பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக தெரிவித்துள்ளார். (வ)

## சிவசக்தி ...

அவரைத் தாக்க முறபட்டதாகவும் அவர் அவ்வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கடநத வாரம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேசிய போது சேமமடுவில் தனக்கு ஏற்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து எடுத்துக் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடப்படத்தக்கது. (இ-5,13)

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல்

# புலிகள் மீது பழி சுமத்தும் அரசியல் நாடகம்

## கல்முனை கி.அ.சங்கம் அறிக்கை

(மட்டக்களப்பு)

அம்பாறை சம்மாந்துறையில் நேற்று முன்தினமிரவு இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக மட்டக்களப்பு கல்முனை கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

''தமிழ்பேசும் உறவுகளே சற்றுச் சிந்தியுங்கள்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

17-08-2003 அன்று இரவு சம்மாந்துறையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில தீய சக்திகளும் அரசியல் லாபம் தேடுபவர்களும் இப்படியான கொலைகளைச் செய்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வீண் பழியைச் சுமத்தி விடுகின்றனர்.இது திட்டமிட்டு வேண்டுமென்றே தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயலாகும்.

கடந்த காலத்தில் அக்கரைப் பற்றில் இளைஞர் ஒருவர் அரசியல் வாதிகளால் கடத்தப்பட்டு நடத்தப் பட்ட நாடகத்தை இப்போது நினைவு கூர்ந்து பாருங்கள்.அதன் யதார்த்தம் என்ன? தற்போதைய சம்பவமும் விடுதலைப்புலிகள் மீது வீண் பழியைச் சுமத்தும் நாடகங்களில் ஒன்றுதான்.

எனவே இவ்வாறான செயல்களை முன்னிட்டு தமிழ் பேசும் மக்கள் விழிப்பாக இருந்து தமிழ்-முஸ்லிம் உறவைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க முன்வர வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-14)

## புலிகளின்...

இன்று கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டுச் செல்லும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஏற்கனவே கொழும்பு சென்ற குழுவினருடன் இணைந்து கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக பாரிஸ் பயணமாகவுள்ளனர்.

பாரிஸில் ஏற்கனவே தங்கியுள்ள பன்னாட்டு சட்ட வல்லுநர்களுடன் இங்கிருந்து செல்லும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இணைந்து அரசு சமர்ப்பித்த இடைக்கால சபை தொடர்பான திட்ட வரைபை ஆராயவுள்ளனர்.

அரசின் திட்ட வரைபை ஆராயும் புலிகளின் சட்டவல்லுநர்கள் அரசுக்கு சமர்ப்பிப்பதற்கான திட்ட வரைபையும் தயாரிக்கவுள்ளனர்.

பாரிஸில் தயாரிக்கப்படவுள்ள திட்ட வரைபு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்பு நோர்வே அரசின் மூலம் இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும். விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப் படவுள்ள வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபை அரசு பரிசீலனை செய்த பின்னர், அது சாதகமாக அமையின் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மின்னல் தாக்கி பொலிசார் மயக்கம்

(வவுனியா)

மின்னல் தாக்கி மயக்கமடைந்த நிலையில் இரண்டு பொலிசார் வவுனியா பொதுவைத்திய மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மன்னார் வீதியில் காவற் கடமையிலிருந்த பொலிசார் இருவரே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் நேற்றும் கடும் மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5,13)

## பிள்ளைகள் விழா

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திருச்சபையின் யாழ்.அத்தியட் சாதீயினத்தின் வருடாந்த பிள்ளைகள் விழாவின் வட்டாரப் போட்டிகள் நாளை புதன்கிழமை வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் சமயக் கல்விக்குழு இயக்குநர் வணபிதா .ஏள் சொலமன் அடிகளாரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

''சமாதானம் '' என்னும் தொனப் பொருளில் இடம்பெறும் இவ் விழாவில் தனிப் பாடல்,குழுப் பாடல் ,வேதாகமப்புதிர், மனனப போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. (த-3)

## நோர்வே...

குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை இக் குழுவினர் இணுவிலில் உள்ள சபாபதிப்பிள்ளை அகதி முகாமிற்கும் நேரில் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களிள் குறைகளையும் கேட்டறிந்து கொண்டனர். (இ-4)

# உள்ளாடைக்குள் கஞ்சா பெண்கள் இருவர் கைது

(வவுனியா)

பெருமளவு கஞ்சா வைத்திருந்த இரண்டு பெண்களை வவுனியாப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாபப் பெண்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதையடுத்து வவுனியாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பெண் பொலிஸாரைக் கொண்டு சோதனை செய்த போது அவர்கள் உள்ளாடைகளுக்குள் பெருமளவு கஞ்சா வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்கள் வவுனியா நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களும் இளைஞர்களும் கஞ்சாவைப் பாவிப்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்திருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (இ-5,13)


## நல்லைக்குமரன் மலர்-(11) வெளியீட்டு விழா-2003

காலம்: 19.08.2003 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி(புதிய நேரம்)
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்
தலைவர்: உயர்திரு. இ. இராமலிங்கம் சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், மாநகர ஆணையாளரும்.

### நிகழ்ச்சிகள்

இன்னிசைக் கச்சேரி:கலாபூஷணம் L. திலகநாயகம்போல் அவர்கள் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)
பக்கவாத்தியம்-வித்துவான் அ.ஜெயராமன் - வயலின்
வித்துவான் து.இராஜன - மிருதங்கம்

வரவேற்புரை: திரு.இரா.இரத்தினசிங்கம் செயலாளர்,சைவ சமய விவகாரக் குழு
தலைமையுரை: தலைவர்
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நல்லை ஆதீன முதல்வர்
- மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் மாவையாதீனகர்த்தா
- சைவத்தமிழ்ப் பேரரசி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
- சுவாமி சித்ருபானந்தா அவர்கள் சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை

மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்: திரு.ந.விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்)
முதற்பிரதி பெறுவோர்: தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினர்
ஆய்வுரை: கலாநிதி செ.திருநாவுக்கரசு விரிவுரையாளர்,ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.
நன்றியுரை: திரு.து.சோமசுந்தரம் (பொருளாளர்,சைவசமய விவகாரக்குழு)

சைவ சமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்



## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீரப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.



## தேவை

மேற்படி நிறுவனத்திற்கு
- சமையலாட்கள்
- ரீ மேக்கர்
- சப்ளையர்

ஆகியோர் தேவை
விரும்புவோர் நேரில் வரவும்;
தொடர்பு:
விஜய் கூல்பார் அன் சைவ உணவகம்
கே.கே.எஸ். வீதி, தாவடி


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.